# மலேஷியாவில் இராணுவ ஆட்சி; ஆட்கள் நடமாட்டத்திற்கு தடை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★★

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 96
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 5 ஸபர் 30 ஞாயிற்றுக்கிழமை [18-5-69]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
... கொழும்பு

## சுடுவதற்கும் உத்தரவு

## நிருபர்கள் வெளியேற்றம்

### இலங்கையர் பலியாகவில்லை என்கிறார் தூதுவர்

கோலாலம்பூர், மே 17

மலேஷியாவில் இராணுவ ஆட்சி நிர்வாகத்தை பொறுப்பேற்றுள்ளது. தலைநகரில் ஆட்கள் நடமாடுவதற்கு முற்றாக தடைவிதிக்கப்பட்டு, நடமாட்டம் கண்ட மாத்திரத்தே சுடுவதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தீவைப்புச் சம்பவங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் அடிக்கடி இடம்பெற்று, நாடு சோகமயமாகக் காட்சியளிக்கிறது.

துணைப்பிரதமர் திரு. துன் அப்துல் ரசாக் தலைமையிலான காபந்து அரசாங்கம் பழைய நிலைமை திரும்பும் வரை இயங்கிவரும். இதில் கலகங்களுக்குக் காரணமெனக்கூறப்படும்மக்கள்சீன சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களும் அங்கம் வகிக்கிறார்கள். இந்த அவசர கால அரசாங்கம் முன்பிருந்த சில அமைச்சர்களின் உதவியுடன் இயங்கும் என பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார். பழைய நிலைமை திரும்பும்வரை தாங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்திருக்க சீனச்சங்கத்தினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

## 'பாரதப் பிரஜைகள் சம்பந்தப்படவில்லை'

### இந்திய லோகசபையில் தகவல்

மலேஷியாவில் கடந்த 4 தினங்களாக தொடர்ந்து நடைபெற்றுவரும் இனவன்முறைச் செயல்களில் பாரத பிரஜைகள் எவரும் சம்பந்தப்படவில்லையென்றும், இக்கலவரத்தின் போதுபாரதப் பிரஜைகள் உயிரிழக்கவில்லையென்றும் பாரத வெளியுறவு துணைமந்திரி சுதேந்திரபாத் சிங்இன்று லோக சபையில் கூறினார்.

பலஇன மக்கள் ஒன்று சேர்ந்து வாழவேண்டும் என்ற மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானின் கொள்கையை தாங்கள் ஆதரிப்பதாகவும் லோக சபையில் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கையர் மாண்டதாக தகவல் எதுவும் இல்லை

### மலேசிய இலங்கை தூதுவர் அறிவிப்பு

மலேஷியாவில் நடைபெற்றுவரும் கலவரத்தின் போது இலங்கையர் எவரும் பலியாகியுள்ளதாக இது வரை அறிவிக்கப்படவில்லையென மலேஷியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் அறிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் அந்நாட்டுத் தூதுவருடன் தொடர்பு கொண்டு இலங்கைப் பிரஜைகள் பற்றி விசாரித்தது.

### செய்தி நிருபர்கள் நடமாடத் தடை

கோலாலம்பூரில் வெளிநாட்டு நிருபர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீதி வழியே செல்வதற்கான அனுமதிப் பத்திரங்... வைத்து இராணுவத்தினரால் பறிமுதல்செய்யப்பட்டன பி. பி. ஸி., தென்கிழக்காசிய நிருபர்கள் உட்படப் பல பிற நாட்டு நிருபர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் அவர்கள் தங்கும் ஹோட்டல்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

வரிசைவரிசையாக வீதி வழியே தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன.

### போக்குவரத்து தடை

போக்குவரத்துக்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்குவதற்காகச் சில இடங்களில் சொற்ப நேரம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

## ஜனாதிபதி தேர்தலில் ஜெயப்பிரகாஷ் இல்லை

புதுடில்லி, மே 17

சர்வோதய இயக்கத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் பாரத ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டாராம். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இத்தேர்தலில் போட்டியிடுவாரென்று நிலவிய செய்திகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. இத்தகவல் அவரது நெருங்கிய வட்டாரங்களிலிருந்து அறிவிக்கப்பட்டது.

## 'தஹா' யு. என். பி.யில் சேருவார்?

கொழும்பு, சனி

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா தமது கட்சியைக் கலைத்துவிட்டு யு. என். பி.யில் சேர விருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இவர் தமது ஸ்ரீலங்கா பிரஜாதந்திரவாதிக் கட்சியை விரைவில் கலைத்துவிட்டு இதில் சேருவாரெனக் கூறப்படுகிறது.

அண்மையில் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா ஸ்ரீ லங்கா சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து யு. என். பி.யில் சேர்ந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கவலைக்கிடம்

சென்னை, மே 17

தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு. கோவிந்தசாமியின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகியிருப்பதாக இன்று மாலை வெளியான வைத்திய அறிக்கையொன்று கூறியது.

இவர் சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரியில்

### 'வட பகுதி பௌத்த பாடசாலை பிரச்னை

# 'மத போர்வையில் இனத்தை பிரிக்கும் துரோகச் செயல்

## பிரதமரிடம் இருதடவை எதிர்ப்பு தெரிவித்தோம்'

## உபசபாநாயகர் கூறுகிறார்

— நமது உடுப்பிட்டி நிருபர் ஜே. ஜெயக்குமார் —

உடுப்பிட்டி, சனி

"வடபகுதி பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது மதப் போர்வையில் ஓர் இனத்தைப் பிளவு படுத்த முயலும் துரோகச்செயலாகும். இது திட்டமிடப்பட்டுசெய்யப்பட்டுள்ளசதியாகும்" என்றுஉபசபாநாயகரும் உடுப்பி[ட்டி] எம்.பி.யுமான திரு.எம். சிவசிதம்[பரம்] நேற்றுநமது நிருபரிடம் தெரிவித்தார்.

'இந்தப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டாமென்று பிரதமர் டட்லிசேனநாயகாவிடம் இருதடவை வற்புறுத்திக் கூறினேோம்' [என்று] அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 1ம்தேதி ... மேலும் தெரிவித்த ... கட்சியினர் இப்பி...

## பிரமிக்கவைத்த 'ஈழத்துச்சித்தர்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஈழத்துச் சித்தர்'' என்று அழைக்கப்படும் கொக்குவிலைச் சேர்ந்த திருமுருக சித்தர் திருநாவுக்கரசு சுவாமி கடந்த வெள்ளிக்கிழமை மாலை வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் நூற்றுக்கணக்கான தேங்காய்களை தமது தலையில் அடித்து உடைத்து அடியார்களைப் பிரமிக்கச் செய்தார்.



ஒன்றின்பின் ஒன்றாக சுமார் 200 இளநீர்களையும் தேங்காய்களையும் இவர் தனது தலையில் அடித்து உடைத்தபோது அடியார்கள் பக்தி சிரத்தையுடன் 'அரோகரா' கோஷம் செய்து ஆனந்தக்கூத்தாடினர். பல அடியார்கள் 'சித்தரிடம்' தேங்காய்களைக் கொடுத்து உடைப்பித்து தமதுநேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொண்டனர்.

இந்தியாவிலுள்ள பல ஸ்தலங்களுக்கும் சென்று திரும்பிய இவர் கடந்த ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பித்து தமதுநேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொண்டனர்.

இந்தியாவிலுள்ள பல ஸ்தலங்களுக்கும் சென்று திரும்பிய இவர் கடந்த 12 வருடகாலமாக கதிர்காமத்தில் தங்கியிருந்தார். மீண்டும் விரைவில் இந்தியாவுக்குச் செல்லவிருக்கின்ருர்.

கடந்த 20 ஆண்டுகளாக ஸ்நானம் செய்யாமலும் எந்த நோயாலும் பீடிக்கப்படாமல்இருக்கும் இவருக்கு வயது 42.

தலையில்தேங்காய் அடித்து உடைத்தது மட்டுமன்றி நெருப்பின்றி கர்ப்பூரம் எரித்தல், நெருப்பை உடம்பில் தேய்த்தல் போன்றவைகளையும் சித்தர் அடியார்கள் முன்செய்து காட்டினர். சுவாமிகளை அடியார்கள் வணங்கி தமது அன்புக் காணிக்கைகளை நேற்று முன்தினம் செலுத்தினர்.

(கா. நி.

# ஜின் கங்கை பெருக்கெடுக்கிறது

கோட்டை, சனி

தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பெருமழை பெய்து கொண்டிருக்கிறது. கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பெய்த பெருமழையால் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. ருகம பகுதி வெள்ளத்தால் வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளது.

காலியிலும் கடும்மழை பெய்து கொண்டிருப்பதால் போக்குவரத்து தொலைபேசி தொடர்புகள் ஸ்தம்பித்துள்ளன.

காலிக்கும் கொழும்புக்குமிடையே தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

ஜின்கங்கா பெருக்கெடுத்துள்ளதால் பலர் வீடிழக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

சமூகசேவைப் பகுதியினர் நிவாரணவேலைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

## ஆலயத்துள் பிரவேசிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவிலுக்குள் தம்மைப் பிரவேசஞ்செய்ய விடுமாறு அளவெட்டியில் உள்ள பின்தங்கிய சமுகத்தவர் சுமார் 250 பேர் கையெழுத்திட்டு அளவெட்டி பாரதி ஜனசமூக நிலையத்துக்கு ஊடாக மகஜர் ஒன்றை மேற்படி கோவில் தர்மகர்த்தாக்களுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

(கா. நி)

## ஆட்சிமன்ற கூட்டத்தொடர் பின்போடப்படும்

கொழும்பு, சனி

ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் இம்மாதப் பிற்பகுதியில் ஒத்திவைக்கப்பட்டு, அடுத்த மாதப் பிற்பகுதியில் கூட்டப்படவிருக்கிறது. இக்கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுவதால் சில முக்கிய பிரேரணைகள் ரத்தாகுமெனக் கூறப்படுகிறது. தொழிலமைச்சர் ஜனுப் முகம்மதுவுக்கு எதிராக வரவிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையும் ரத்தாகும்.

கூட்டத்தொடர் பின்போடப்படும் இடைவேளைக் காலத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கெய்ரோவுக்குத் தமது 5 நாள் விஜயத்தை மேற்கொள்வார். அடுத்த கூட்டத்தொடரில் 1969-70ம் வருட வரவு-செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன்சிம்மாசனப்பிரசங்கமும் இடம் பெறும்.

நேற்றுநமது நிருபரிடம் தெரிவித்தார்.

**'இந்தப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டாமென்று பிரதமர் டட்லிசேனநாயகாவிடம் இருதடவை வற்புறுத்திக் கூறினேம்'என்றும் அவர் தெரிவித்தார்.**

அடுத்த மாதம் 1ம்தேதி யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க விருப்பது குறித்து உபசபாநாயகரிடம் நமது நிருபர் கேட்டபோதே மேற்கண்டவாறுசொன்னுர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

''வட பகுதியில் மூன்று தமிழ்- சிங்கள பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்பதை வெகு சுலபமாகத் தடுத்திருக்கலாம். ஆனல் தமிழரசுக் கட்சியினர் இப்பிரச்னையைப் பத்திரிகைகளில் பிரமாதப் படுத்தியதின் மூலம் மேலும் நிலைமையைக் குழப்பி விட்டனர்.''

''தமிழ்ப் பகுதிகளில் பௌத்தபாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது பலத்த கண்டனத்திற்கு உரியது. இது மதபோர்வையில் ஒரு இனத்தைப் பிளவுபடுத்த முயலும் துரோகச் செயலாகும். இவ்விடயத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மௌனம் சாதிக்கவில்லை.

அமைதியான முறையில் இப்பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது. நாம் இத் தமிழ் பௌத்த பாடசாலைகளைக் கையேற்க வேண்டாமென்று இருதடவைகள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவைச் சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போதுவற்புறுத்தியுள்ளோம் இப்பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதால் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தை இழக்க வேண்டி நேரிடுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

சிறுபான்மைத் தமிழர்களுக்கென ஏற்கனவே பல பாடசாலைகள் நிறுவப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன: இத்தருணத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியில் பௌத்தபாடசாலைகளை நிறுவுவது அநாவசியமானது துவேஷ உணர்ச்சிகளே இதற்கு காரணம். இது திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டுள்ள சதியாகும்.

இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்குச் சிங்களப் பெயர் சூட்டிப் பௌத்த மதத்திற்கு மாற்றும் முயற்சிகள்வெட்கப் கூடியது. வேதனைக்குரியது.

அரசாங்கம் மட்டுமல்ல சிறுபான்மைச் சமூகமும்இவ் விடயத்தில் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். இன்றேல் தமிழினம் அழிந்து விடக் கூடிய அபாயம் ஏற்படலாம். எனினும் அடுத்தமாதம் 1ம் திகதிஇம் மூன்று தமிழ்- சிங்கள பௌத்த பாடசாலைகளும் அரசாங்கத்தால் 'பொறுப்பேற்கப் படும் என்பது உறுதியாகி விட்டது. இத்தகைய முயற்சிகளுக்குத் தமிழ்க் காங்கிரஸ் தொடர்ந்து எதிர்ப்புக் காட்டியே வரும். இதுபற்றிப் பிரதமருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவோம்.

தமிழினத்திற்கோ அல்லது எங்கள் கட்சிக்கொள்கைக்கோ பாதகமான முறையில் தேசிய அரசாங்கம் நடந்தால் நாம் அரசாங்கத்திலிருந்து விலகத் தயங்க மாட்டோம்.

## பாடசாலை சுவீகரிப்பு எதிர்ப்புக்கு பொலிஸ் நடவடிக்கை என்ன?

### தலைமைக் காரியாலயம் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடக்கிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு எந்தவகையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதுபற்றி ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டமொன்று இம்மாதம் 23-ந் திகதி நடைபெற இருக்கின்றது.

இக்கூட்டத்திற்கு சகல எம் பிக்களையும் தவருது சமுகம் தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எந்தவகையிலும்முதலாம் திகதி இக்கல்லூரிகளை திறக்கவிடாமல் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தமிழரசுக் கட்சி மேற்கொள்ளுமென்று தமிழரசு எம். பி. ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தமிழரசுக்கட்சி 1-ந் திகதி சத்தியாக்கிரகம் போன்ற, நடவடிக்கைகள் எதையாவது! மேற்கொண்டால் பொலிஸார் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பது பற்றி உதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின்ஆலோசனையைப் பெறுவதற்காக வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் நேற்றுக்காலை கொழும்பு சென்ருர்.

இதுசம்பந்தமான சி. ஐ. டி. அறிக்கையொன்றையும் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் டி. ஐ, ஜி. யிடம் சமர்ப்பிப்பார்.

(கா. நி)

## 'எதைத்தான் தமிழரசார் எதிர்க்காமலிருந்தார்கள்?'

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இந்த நாட்டில் வாழும் இரண்டு லட்சம் தமிழ் பௌத்தர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, தற்போது நடந்து கொண்டிருக்கும் தமிழ் பௌத்த பாடசாலைகளை அடுத்த முதலாம் திகதி தொடக்கம் அரசாங்கம் எடுக்கஇருப்பதையிட்டுஆட்சேபனைக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி இந்தநாட்டிலே இடம் பெற்ற எந்தக்காரியத்தைத் தான் இதுவரை எதிர்க்காமல்விட்டது. தமிழ்பௌத்த பாடசாலைகள் பௌத்தர்களுக்கென்று பௌத்தர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை விவகாரத்தில் சைவர்களும், கிறிஸ்தவ மக்களும் கூக்குரல் போடுவது வேடிக்கையும் வேதனையும் கொடுக்கக்கூடிய ஒரு காரியமாகும்.''

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நல்லூர்க் கிளைத்தலைவரும், தமிழ் பௌத்த சங்கத்தின் முக்கிய பிரமுகருமான திரு. ஏ. எஸ். கந்தசாமி பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே வளர்ந்து பொருளாதார ரீதியில் அடக்கி ஒதுக்கி- அடங்கி ஒடுங்கி வாழ்ந்த தமிழ் மக்கள் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பே கத்தோலிக்கர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மதம்மாறியதன் மூலம் அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சியடைந்து புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது. தமிழ் பௌத்தர்களாகிய நாங்கள் எங்களுக்கென்று பாடசாலைகளையும்,பௌத்த கேவில்களையும் ஏற்படுத்தி அதன்மூலம்எங்கள்வாழ்வை மாற்றியமைக்க விரும்புகின்றேம். தமிழ்ப் பௌத்தர்களுடன் தமிழரசுக்கட்சி மோதுவது இந்த நாட்டில் வாழுகின்ற சகல பௌத்த மக்களுடன் மோதுவதற்கு ஒப்பாகும்

(கா. நி)

## தமிழ்க் கட்சிகள் முன்வர வேண்டும்; தமிழரசு கருத்து

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் எம் பி. திரு. ஸி. கதிரவேற்பிள்ளையும், பருத்தித்துறை எம். பி. திரு. துரைரெத்தினமும் திரு. ஜெயக்கொடியும் இன்று மாலை கரவெட்டியிலுள்ள பௌத்த பாடசாலைகளுக்கு சென்று பார்வையிட்டனர்.

இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதன் மூலம் தமிழ் மக்களை சிங்கள மக்களாக மாற்றுவதற்கே அரசாங்கம் முனைகிறது. இது அநீதியான செயல் என திரு. ஜெயக்கொடி பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் கூறினுர். இதை வன்மையாகக் கண்டிக்க தமிழ் மக்களும், மற்றைய தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதே தமிழரசுக் கட்சியின் விருப்பமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடமாடத் தடை

கோலாலம்பூரில் வெளிநாட்டு நிருபர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீதி வழியே செல்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் துப்பாக்கி முனையில் போக்குவரத்துக்கு முற்றுகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்குவதற்காகச் சில இடங்களில் சொற்ப நேரம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டு உணவு அமைச்சர் திரு. கோவிந்தசாமியின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகியிருப்பதாக இன்று மாலை வெளியான வைத்திய அறிக்கையொன்று கூறியது.

இவர் சில தினங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# 'மற்றிரு பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்கும்'

## கடவத்த நந்தாராமதேரோ நம்பிக்கை

**அளவெட்டி, சனி**

**யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மற்றிரு பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப் பேற்பதுபற்றி யோசித்து வருகிறதென்றும், விரைவில் இவை கையேற்கப்படுமென்றும் கடவத்த நந்தாராம தேரோ நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.**

'தமிழரில் சிறுபான்மையோர் நன்மையடையும் பொருட்டு 5 தமிழ் பௌத்த பாடசாலைகளை இங்கு நிறுவினேம், ஆனல் இப்பாடசாலைகளை நடாத்துவதற்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் தான் அரசாங்கத்திடம் இப்பாடசாலைகளை ஒப்படைக்கிறேம்.'

இவ்வாறு நேற்று மாலை யாழ் நாகவிகாரையில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் கடவத்த நந்தாராமதேரோ கூறினுர்.

சங்கத்தலைவர் திரு. ஆர். ஜே. டேவிட் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தேரோ மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இச்சங்க மூலம் வடமாகாணப்பிள்ளைகள் பௌத்தத்தையும், சிங்களத்தையும் படிக்க வேண்டுமென்பதற்காகவே எம்மால் 5 பாடசாலைகள் இங்கு நிறுவப்பட்டன பல வருடங்களாக எம் ஆதரவுடன் இப்பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இப் பாடசாலைகளில் கல்வி பயிற்றும் ஆசிரியர்கள் கஷ்டப்பட்டாலும், தமது பணத்தைச் செலவிட்டு பாடசாலைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. பாராட்டுக்குரியது இப்படியாக ஆசிரியர்கள் பணத்தை செலவிட்டு கஷ்டப்பட்டு தளரும் நிலை உருவான போது நாம் பல பௌத்த சங்கங்களிடம் இப்பாடசாலைகளை ஏற்று நடாத்தும்படி கோரினேம் அச்சங்கங்கள் இப்பாடசாலைகளை ஏற்ருலும் பணம் தரமுடியாது என்று கூறுகின்றன. நாம் பின்பு பௌத்த சம்மேளன உதவியை நாடினேம் அவர்களும் பணம் இல்லை என்றே கூறினர். மகாபோதி சங்கமும் இப்படியே எமக்கு கைவிரித்து விட்டது. இறுதியில்தான் நாம் இப்பாடசாலைகளை அரசாங்கத்திடம் கொடுத்து எதிர்காலத்தை நல்லாக்க வேண்டும் என விரும்பினேம். இதன்படி அரசாங்கத்துக்கு கடிதம் எழுதிய பின்பு கல்விய அமைச்சரிடம் சென்ற மாதம் பேச்சுவார்த்தை நடாத்திய பேதே இப் பாடசாலைகள் ஜூன் 1-ம் திகதி கட்டாயம் கையேற்கப்படும் என உறுதி கூறினுர்கள்.

இதன்படி 3 பாடசாலைகளும் அடுத்தமாதம் பொறுப் பேற்கப்பட இருக்கின்றன. மற்ற இரு பாடசாலைகளும் காலப் போக்கிலேயே கையேற்கப்படும்.

# 85 கொலை

கோட்டை, சனி

கடந்த ஏப்ரல் மாதத்தில் நாடெங்கிலும் மொத்தம் 85 கொலைகள் நடைபெற்றுள்ளன. இவற்றுள்இரண்டு இரட்டைக் கொலைகள். ஒன்று முக்கொலை.

பொலிஸ் தலைமையகம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

இவ்வருடத்தில் முதல் நான்கு மாதத்திலும் 283 கொலைகள் நடந்துள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இந்தத்தொகை கடந்த வருடத்திலும் பார்க்க 16.5 வீதத்தினுல் கூடியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடும் வளவும்:
11 பரப்புக் கொண்ட கல்வீடும் வளவும் விற்பனைக்குண்டு. மண்டகப்படி மின்சார தண்ணீர் வசதி உள்ளது. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். கே. எஸ். கந்தையா, ஸ்கந்தவாசா, கோவில்வீதி, மாவிட்டபுரம். 1128

கடைக் கட்டிடம்
மீன் சந்தைக்கு முன் வடிகால்வாய்க்கு மேலுள்ள கடைக் கட்டிடம் விற்பனைக்குண்டு. (ஆயிரம் இந்தியா ஓடுகள், மரங்கள், கதவு நிலைகள், யன்னல்கள்) விபரங்களுக்கு: S. R. தளையசிங்கம், ஆனைப்பந்தி. 1018

### வாடகைக்கு

நல்லூர் மார்க்கட்டுக்கு அருகாமையில், ஆடியபாத ரோட்டிலுள்ள 280 இலக்க வீடு வாடகைக்கு உண்டு. மின்சார வசதியுமுண்டு. விபரங்களுக்கு ஆயுர்வேத டாக்டர் பரமானந்தம், 16, அரசவீதி, நல்லூர். 1112

### தேவை

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தியேட்டருக்கு ஒரு புக்கிங் கிளாக், ஒரு ஒப்பிறேற்றர் தேவை. பிணைப் பணம் ரூபா 1500/-. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இல. 1129 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1129

மத்தியமாகாணத்திலுள்ள பட்டினம் ஒன்றின் பிரசித்தமான பிள்ளையார் கோவிலுக்கு 1-7-69-ந் திகதியிலிருந்து பொறுப்பேற் ஐயர் அல்லது குருக்கள் தேவை. தங்கும் இடவசதி உண்டு. அனுபவம் தகுதிக்கேற்ப சம்பளம் தரப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பரஇல. 1126, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1126

படவிமர்சனம்

# அதே கண்கள்

யோகி

அந்தப் பங்களாவில் தொடர்ச்சியாக நடந்த 3 கொலைகளுக்கும் காரணமான கொலைகாரன் யார் என்பதைக் கடைசிக்காட்சி வரை வெளிப்படுத்தாத விதத்தில் விறுவிறுப்பான முறையில் அதேகண்களில் தமது திறமையைக் காட்டியிருக்கிறார் டைரக்டர் திரு லோகசந்தர். பயங்கரம், திகில், திகைப்பு 'சஸ்பென்ஸ்' நிறைந்த இப்படம் ஆரம்பமுதல் கடைசி வரை விறுவிறுப்பாகச் செல்கிறது. அடுத்த கட்டம் என்ன என்று ஆவல் கொள்ளும் விதத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.

கொலைகாரனைக்கண்டு பிடிக்கும் ரவிச்சந்திரன் பல தாக்குதல்களை எதிர்நோக்குகிறார். ஒருகட்டத்தில் ரவிச்சந்திரன தாஞ அக் கொலைகாரன் எனச் சந்தேகிக்கிறோம். சமூகசேவையிலீடுபடும் கல்லூரி மாணவி காஞ்சஞ கலகலப்பாக நடிக்கிறார். பங்களாவில் நள்ளிரவில் பயந்த நிலையில் இருக்கும்போதும் ரவிச்சந்திரனுடன் ஓடியாடி விளையாடும் போதும் முகபாவத்தின் மூலம் அவர் நடிப்பை வெளிப்படுத்துகிறார்.

அசோகஞ, பாலாஜியா, ராமதாஸா, கருணாநிதியா கொலைகாரன் என்பதை அறிய முடியாமல் கடைசிக் கட்டத்தில் வேஷம் கிழித்தெறியப்படும் போது அட இவன்தாஞ கொலைகாரன்! எனச் சொல்லத் தோன்றுகிறது. பெண் வேடத்தில் வரும் நாகேஷ் அவரது ஜோடி மாதவியுடன் சேர்ந்து நம்மை சிரிக்கவைக்கிறார்.

அசோகனின் காதலியான கீதாஞ்சலி நீச்சலுடையில் குளு குளு கலரில் தோன்றும் போது கண்ணுக்கு நல்ல விருந்தாக இருக்கிறது. கோஷ்டி நடனம் அருமையானது. சிறந்த இசையமைப்புடன் உள்ள 3 பாடல்கள் நினைவில் இருக்கின்றது. சண்டைக்காட்சிகள் மலிந்துள்ளன. கடைசிவரை அலுப்புத்தட்டாமல் பார்க்கக் கூடிய சகல அம்சமும் நிறைந்த இப்படம் தற்பொழுது யாழ்ப்பாணம் வெலிங்டன் திரையில் ஓடிக் கொண்டிருக்கிறது.

## போட்டிமுடிவுகள்

வல்வெட்டித்துறை, சனி
அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலை மாணவருக்கும், கொச்வலை சிறுவர் சீர்திருத்தப் பாடசாலை மாணவருக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், கிரிக்கெட் ஆட்டம் முதலியவற்றின் முடிவுகள் பின்வருமாறு:

உதைபந்தாட்டம்: அச்சுவேலி, கொக்வலையும் முறையே 1—1 கோல் போட்டு சரிசமமாக ஆடினர். கைப்பந்தாட்டம்; அச்சுவேலிகொச்வலை மூன்று ஆட்டங்கள் ஆடி 2—1 கோல்கள் எண்ணிக்கையில் அச்சுவேலி வெற்றியீட்டியது கிரிக்கெட்: அச்சுவேலி கொக்வலை இடையே நடைபெற்ற போட்டியில் கொக்வலை 6 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

இப்போட்டியாவும் அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

## பாஷையூர் வெற்றி

உடுப்பிட்டி, சனி
கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்திற்கும்- பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே சிநேகிதபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் பாஷையூர்க் கோஷ்டி 5-2 கோல்களால் வெற்றியீட்டியது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்குத் திரு. சி. சர்வேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார்.

ஊர்காவற்றுறை, சனி
விளையாட்டு அமைச்சைச் சேர்ந்த திரு. அன்ரனி அபயசிங்கா ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் பாலவர்களுக் [illegible]

## உற்சவம்

அல்லைப்பிட்டி, சனி
புங்குடுதீவு, ஊரைதீவு சிவன்கோவில் வருடாந்த உற்சவம் தேர், தீர்த்தம் ஆகிய உற்சவங்களுடன் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவில் அநேகம் பக்தர்கள் கலந்துகொண்டார்கள்.

0 0 0

பண்டத்தரிப்பு, சனி
பண்டத்தரிப்பு பத்திமா நாயகியின் திருநாளையிட்டு விசேட வைபவங்கள் இடம்பெற்றன. திங்கட்கிழமை இரவு 12 மணிக்கு திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பல்வேறு கிராமங்களிலுமிருந்து பெருந்தொகையான பக்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 18—5—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை. 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளம் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணையிசை, 7-35 பேச்சு, 7-45 நேயர்கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 வாத்தியஇசை, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

இன்றைய

# ‘அரசியலில் தமிழர் தோற்ருலும் விளையாட்டில் வெற்றியேபெறுவர்’

உடுப்பிட்டி, சனி
'அரசியலில் நாம் தோற்ருலும், விளையாட்டில் தமிழ் வீரர்கள் வெற்றிவாகையே சூடுவர். 1932-ம் ஆண்டு இந்திய சுதந்திரத்தை முன்னிட்டு வட்டமேசை மகாநாடு ஒன்றில் கலந்து கொள்ள மகாத்மாகாந்தியும், மற்றும் இந்திய அரசியல் வாதிகளும் இங்கிலாந்துக்குச் சென்றனர். அதே வேளையில் இந்தியாவிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி ஒன்றும் இங்கிலாந்து சென்றது. ஆனல் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்ற இந்திய அரசியல்வாதிகள் அரசியலில் தோல்வியடைந்துதிரும்பினர். இந்திய கிரிக்கெட் கோஷ்டி வீரர்கள் வெற்றியுடன் இந்தியா திரும்பினர்.'

மேற்கண்டவாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் கூறினர்.

கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தினரால் அண்மையில் அகில இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் பாங்கொக் சென்று திரும்பிய திரு; கே. ஸ்ரீதரனுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினர்

நெல்லியடி மத்தியமகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விழாவிற்குத் தலைமைவகித்த இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை அதிபர் திரு வீ. எஸ். கந்தப்பு பேசுகையில் விளையாட்டு வீரர்களைப் பாராட்டி ஊக்குவிப்பதன் மூலமே வாலிபர்களை விளையாட்டுத் துறையில் ஈடுபடுத்தலாம் என்று கூறினர்.

உபசபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்டத்தில் காட்டிவரும் ஆர்வம் பாராட்டிற்குரியது. இக்கழகத்தைச் சேர்ந்த திரு. ஸ்ரீதரன் பாங்கொக் சென்றது வடமராட்சி மக்களுக்குப் பெருமையளிக்கின்றது. ஸ்ரீதரனின் சிறந்த விளையாட்டு வெளிநாட்டவர்களை மிகவும் கவர்ந்துவிட்டது. இக்கழகம் எமக்குப் புகழ்தேடித் தந்துள்ளது. இவர்களை ஊக்குவிக்க வசதிகளுடன் கூடிய நல்ல விளையாட்டு மைதானம்அவசியம்.

பாஷையூர் சென். அந்தனிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு. ஏ. பிலிப்பையா, மற்றும் முன்னாள் உதவிப்பொலிஸ் அதிபர் திரு கே. ஆறுமுகம், திரு. கணேசன் ஆகியோரும் பேசினர். திரு. தியாகலிங்கம் நன்றியுரை கூறினர்.

## இரு வட்டாரம் ஒன்ருக இணையும்

உடுப்[illegible]டி, சனி
சமீபத்தில் யாழ். மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்ட உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா துன்னலை தெற்கு [illegible] சன சமூ[illegible]நிலையம், கிராம முன்னேற்[illegible] சங்கம் ஆகியவைகளால் அளிக்கப் [illegible]

## ‘சங்கத்தில் அரசியலை புகுத்துவதுநல்லதல்ல’

யாழ்ப்பாணம், சனி
"இச்சங்கத்தில் அரசியலைப் புகுத்த வேண்டாம். அரசியலில் ஈடுபடுகிறவர்கள் இச்சங்கத்தில் இருப்பது நல்லதல்ல".

என யாழ்ப்பாணம் பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் திறப்புவிழா நேற்று நடைபெற்றபோது கிராம அபிவிருத்திப் பரிசோதகர் திரு. வி. செல்லத்துரை பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது இச்சங்கத்திற்கு எதிர்ப்பாளர்கள் சிலர் இருக்கின்ருர்கள். இதற்குப் பலர் முட்டுக்கட்டை போட்டாலும் நீங்கள் ஒற்றுமையாக இச்சங்கத்தை வளர்க்க வேண்டும்.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி இலாகா உதவி ஆணையாளர் திரு. வி. கனகசபை, ஜனுப் சாகுல், கிராமசேவகர் ஜிலிஸஸ் உட்பட மற்றும்பலர் பேசினர்கள். கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி இலாகா உத்தியோகத்தரும் கலந்து கொண்டார்.

## நிறை குறைந்த படிகள்

### 9 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
கடைகளில் நிறை குறைந்த படிகளைப் பாவனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் 9 வர்த்தகர்களுக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் அபராதமும் ஒரு நாள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்குகளை யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

ஒன்பது வர்த்தகர்களுக்கும் 25 ரூபாவிலிருந்து 100 ரூபா வரை அபராதம் விதித்த யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் மொகமட் ஜமீல் இவர்களை நீதிமன்றம் கலையுமவரை சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும்உத்தரவிட்டார். (கா-நி)

## புதிய உத்தியோகஸ்தர்

அளவெட்டி, சனி
அளவெட்டி முற்போக்கு வாலிபர்இயக்க வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு செல்லத்துரை, உபதலைவர்-கே. ஓ. சின்னையா, செயலாளர்- திரு. அருளானந்தம், தனதிகாரி- திரு மகாலிங்கம். 11பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## கடன்காசு கேட்டவருக்கு கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு
கடன்காசு கேட்கப் போன ஒருவர் கத்திவெட்டுக்கு இலக்காகினுராம். இந்தச் சம்பவம் பலாலிப் பகுதியில் நடைபெற்றது.

கத்தி வெட்டுக்கு இலக்கான சிதம்பரப்பிள்ளை ஐயாத்துரை (32 வயது) என்பவர் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காங்கேசன்துறை பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (கா-நி)

## எழுச்சி வாரமும் எம்.பி. பிறந்ததினமும்

மட்டுவில். சனி
தமிழரசுக் கட்சியினரின் எழுச்சிவாரம் அடுத்தமாதம் 5-ம் திகதி சாவகச்சேரியில் கொண்டாடப்பட இருப்பதாக, தென்மராட்சி தமிழரசு வாலிப முன்னணி தெரிவித்துள்ளது.

சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினத்தின் பிறந்த தினமும் அதே தினத்தில் வருவதைத் தொடர்ந்து, இக்கூட்டத்தை சாவகச்சேரி சந்தை மைதானத்தில் ஊர்வலத்துடன் கொண்டாடப்பட இருக்கிறது. அன்றைய தினம் சாவகச்சேரி எம். பி. பற்றிய ஒரு நூலும் வெளியிடப்படும்.

## எழுவைதீவு கி.ச.தேர்தல்

ஊர்காவற்றுறை-சனி
எழுவைதீவு கி.ச.தேர்தல் அடுத்தமாதம் 17 ந் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, சனி
கேகாலை சென் மேரிஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு. அற்றியானந்தன் கிளிநொச்சிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் இளவாலையைச் சேர்ந்த ஆசிரியராவார்.

புரட்சிகரமான 125வது தினம்!
தினசரி 2-30, 6-30, 9-45
ராஜா (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
ஒளி விளக்கு
இன்று (18-5-69) பல்கனி ரிக்கற் வாங்குபவர்களுக்கு எம்.ஜி.ஆரின் லிதோ' வண்ண கலண்டர் இனமாக வழங்கப்படும்.

களைகள்
எல்லாவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி விளக்கு

இன்று (18-5-69) பல்கனி ரிக்கற் வாங்குபவர்களுக்கு எம்.ஜி.ஆரின் லிதோ' வண்ண கலண்டர் இனமாக வழங்கப்படும்.

எல்லா வகுப்புகளுக்கும் மாதர்களுக்கு அரைக்கட்டணம்.

ராணி [யாழ்ப்பாணம்] [தினசரி 3காட்சிகள்]

* ராஜேந்திரகுமார் * சதனா நடித்த

(ஈஸ்ட்மன் கலர்-ஹிந்தி) புதிய கொப்பி குறிப்பிட்ட சில தினங்கள்

## ஆர்ஸூ

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் * ஜெயலலிதா நடித்த

## கலாட்டா கல்யாணம்

கிங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னார்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா
நடித்த

## ஆலயம்

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன் (கொழும்பு)
விஜயா மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)



ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடிக்கும்

## அதே கண்கள்


ஊர்காவற்றுறை, சனி

விளையாட்டு அமைச்சைச் சேர்ந்த திரு. அன்ரனி அபயசிங்கா ஊர்காவற்றுறை புனித, அந்தோனியார் கல்லூரியில் மாணவர்களுக்கான மெய்வல்லுனர் பயிற்சி வகுப்பை நடாத்தினர். சுமார் 150 மாணவர்கள் இவ்வகுப்பில் கலந்துகொண்டனர்.

......

### மலேரியா தடுப்புநடவடிக்கை

கண்டி, சனி

ஈஸ்டர் விடுதலைக்குப் பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சௌக்கிய பகுதியினர் விடுதி மாணவர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் மலேரியா அவர்களுக்கு வராமல் தடுப்பதற்கான வழிவகைகளை மேற் கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். பல்கலைக்கழக வட்டாரத்துக்குள் மலேரியா பரவுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே மேற்படி அறிவித்தல் விடுககப்பட்டது.


இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
முத்துராமன் - காஞ்சனா
நடித்த
பாமா விஜயம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
சிவாஜி - பண்டரிபாய்
நடித்த
★ கண்கள் ★

Daily 4-30 p.m. only.
The sex life of cities in the world
**Forbidden Cities**
(Eastman color)
(Strictly for Adults)

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00&9-45 P.M.
NATALIEVARLEI
in
KIDNAPPING
CACAUSIAN STYLE

REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p m.
M. G. M's
THE GREAT TRAIN ROBBERY


8-15 வாத்தியஇசை, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## இன்றைய பலன்

சௌமிய வருடம்
18-5-69

ஞாயிற்றுக்கிழமை
வைகாசி 5-ந் திகதி

திதி- துதியை பகல் 5-09 மேல் திருதியை.

நட்சத்திரம்- ரோகிணி காலை 7-04 மேல் மிருகசீரிடம்.

ராகுகாலம் 4-23— 5-53.

சுபநேரம்- 3-53 10-23.

---

இன்று பிறந்தவர்களுக்கு குடும்பஸ்தர்கள் வாழ்வில் குதூகல மிகுதியும், விவசாயிகளுக்கு தனதானிய விருத்தியும், குழந்தைகள் விடாப்பிணி விரைவில் குணமடைதலும், வாகனசுகம், வரவில் திருப்தியும் வணிதையர்களுக்கு வழமான ஆண்டாகும்.

---

மேஷம்- புய மோதும் புண்ணான நெஞ்சம்.
ரிஷிபம்- வாழ்வில் வசந்தம், வழியும் பிறக்கும்.
மிதுனம்- கல்விநலன், கனி வெல்லம்.
சடகம்- மந்தகாச வாழ்வு, மனைச் சிறப்பு.
சிம்மம்: வாகனசுகம், வரவும் பெருகும்.
கன்னி- இதயக்களிப்பு, இணைப்பு இறுகும்.
துலாம்- ஆயுத பயம், அமைதி வேண்டும்.
விருச்சிகம்- உறவாடும் உள்ளங்கள் ஒன்ருகும் இன்று.
தனுசு- பொருள் கஷ்டம், புகழில் இறக்கம்.
மகரம்- அன்புப்போர் தொடுக்க அசைந்துவரும் அழகுத் தேர்.
கும்பம்- மதிநுட்பம், மக்கள் ஆதரவு
மீனம்- நிமிர்ந்த நடை, நிலையான வரவு.

-சோதிடக் கலாநிதி-
திருமலைவேலுப்பிள்ளை

சம்பந்தமில் யாழ். மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்ட உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா துன்னாலை தெற்கு தயாநிதி சன சமூக நிலையம், கிராம முன்னேற்ற சங்கம் ஆகியவைகளால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது விடுக்கப்பட்ட கோரிக்கைகளைச் செயல்படுத்துமாறு உள்ளூராட்சி அமைச்சின நிரந்தரக்காரியதரிசிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இத்தகவலைத் திரு. பிரேமதாசா மேற்படி கி. மு. சங்கம் சன சமூக நிலையம் ஆகியவற்றின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

இந்தச் சங்கங்களின் பின் வரும் கோரிக்கைகள் அமுல் செய்யப்படவிருக்கின்றன.

கட்டைவேலிக் கிராமச் சபையில் சிறுபான்மைச் சமூகத்தினரும் பிரதிநிதித்துவம் பெறக்கூடியதாக 12-ம் 13-ம் வட்டாரங்கள் ஒன்ருக இணைக்கப்படும். துன்னாலையில வீடற்ற சிறுபான்மைக் குடும்பங்களுக்கு சுவீகரிக்கப்பட்ட காணிகளில் வீடமைப்புத்திட்டம் நிறுவப்படும். சிறுபான்மைப்பிள்ளைகளுக்கான விளையாட்டு மைதானம் அமைக்கப்படும். துன்னாலையில் கிணற்றுடன் மலசலகூடம் நிறுவப்படும்.

சிறுபான்மைச் சமூகத்தினரின் வீடமைப்புத்திட்டத்திற்கான காணிச் சுவீகரிப்பில் உடன்நடவடிக்கை எடுக்குமாறு காணிப் பகுதி ஆணையாளருக்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா அறிவித்துள்ளார்.

### இடமாற்ற ஊர்ஜிதம்

உடுப்பிட்டி, சனி

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஹுலந்த வ அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து 1-5-69 முதல் கரணவாய் தெற்கு விநாயகர் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த ஆசிரியர் சு. மகாதேவன் என்பவர் தனது மனைவி மக்களுடன் தான் குடியிருந்த வீட்டையும் காலிசெய்துவிட்டுக் கூப்பன்களையும் மாற்றிக்கொண்டு கரணவாய் வந்தார். ஆனல் அன்றைய தினமே அவர் தனது மாற்றம் தடைபட்டதை அறிந்து திடுக்கிட்டார். இதனல் கவலையடைந்த அவ்வாசிரியர் கல்வி அமைச்சருடனும் பகுதி எம். பியுடனும், தொடர்புகொண்டதைத் தொடர்ந்து இவர் இம்மாதம் 14-ந் திகதி தொடக்கம் கரணவாய் வித்தியாலயத்திலேயே கடமையாற்ற அனுமதிக்கப்பட்டார்.


# எல்லாவற்றையும் ஒழித்து விளைச்சலைப் பெருக்க

புதிய சீர்ப்படுத்திய

# ஸ்டாம் எப்-34




புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34, உங்கள் விளைச்சலைச் சூறையாடும் புற்கள், முட்கோரைப் புற்கள், அகன்ற இலைக்களைகள் அனைத்தையும் தேர்ந்து அழித்து ஒழிப்பதின் மூலம் அமோக நெல் வேளாண்மைக்கு உத்தரவாதமளிக்கிறது.

புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34 இல் 36% டி, பி. ஏ. இடம் பெற்றுள்ளது. இக் களைப்புற்கொல்லி தெளிகருவியின் பீச்சு முனைகளில் கட்டி பட்டு அடைத்துக் கொள்வதில்லை. இதனை அடைப்பத தெளிகருவி மூலமோ மிஸ்ட் புளோவர் மூலமோ தெளிக்கலாம். முன்னைப் பொழுதைப பார்க்கிலும் சிறப்பான வகையில் இது களைகளைக் கட்டுப் படுத்துகிறது.

அதிக நெல பயிரிட்டுக் கூடுதல் இலாபம் சம்பாதிக்க உபயோகியுங்கள் "ஸ்டாம்" எப் - 34.

ஷெல ரசாயனப பொருட்கள்
SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேஷியாவில் காபந்து அரசாங்கம்

## துணைப் பிரதமர் தலைமை

## "ஜனநாயகம் மடிந்துவிட்டது"

— துங்கு

கோலாலம்பூர், மே 17

மலேஷியாவில் தோன்றியுள்ள பயங்கர நிலையைச் சமாளிக்க காபந்து அரசாங்கம் அமைக்கப்படவிருக்கிறது. துணைப் பிரதமர் துன் அப்துல் ரசாக் தலைமையில் இந்தக் காபந்து அரசாங்கம் அமையும். இதில் முந்திய மந்திரிசபையில் அங்கம் வகித்த அமைச்சர் சிலரும் அங்கம் வகிக்கவிருக்கிறார்கள். மக்கள் சீன சங்கத்தைச் சேர்ந்த சில அங்கத்தவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

### பயங்கரவாதிகள் கைது

இதற்கிடையே நேற்று கோலாலம்பூரில் ஒரு கட்டடத்தினுள் பதுங்கியிருந்த 93 பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். பயங்கர ஆயுதங்களுடன் இருந்த கோஷ்டியை ஹெலிகாப்டரில் கண்காணிப்பு நடத்திய விமானப்படையினர் கைதுசெய்தனர். இதனைத்தொடர்ந்து இவ்வித பயங்கரவாதிகளைத் தேடும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

### சட்டத்தை மீறுவோர் சுடப்படுவர்

சட்டத்தை மீறுவோர் உடனே சுடப்படுவர் என அரசாங்கம் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்னமும் கலவர நிலை இருந்துவருவதாலேயே இவ்வித எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கலகங்களை அடக்குவதற்கு முப்படைகளும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

### 'ஜனநாயகம் மடிந்துவிட்டது'

'மலேஷியாவில் ஜனநாயகம் மடிந்துவிட்டது' எனப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கவலை தெரிவித்துள்ளார்.

கலவரங்களைத் தொடர்ந்து மூடப்பட்ட பாடசாலைகள் இன்னமும் திறக்கப்படவில்லை.

### ஆஸ்பத்திரிகளில் இடநெருக்கடி

சண்டைகளின் போது பொலிசாரும் இராணுவமும் சுட்டதில் பலமான உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. கோலாலம்பூர் ஆஸ்பத்திரிகளில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டவண்ணமிருப்பதால் இடநெருக்கடியேற்பட்டுள்ளது. காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களில் அநேகர் சீனர்கள்.

### பலர் கைது

கலவரங்களைத் தூண்டியவர்களெனப்பலர் இப்போது கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சமீபத்தியதேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### பத்திரிகைகளுக்கு அனுமதி

பத்திரிகைகள் பிரசுரிக்கப்படக்கூடாதென்று அரசாங்கம் விதித்திருந்த தடை இப்போது விலக்கப்பட்டுப் பத்திரிகைகள் பிரசுரமாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனினும் பத்திரிகைகள் மீது தணிக்கை இருக்கும். கலவரங்களைத் தூண்டிவிட எடுக்கும் முயற்சிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### தற்காலிக நிறுத்தம்

காபந்து அரசாங்கம்

---

## 'ஈழநாடு'

# செய்தித்தலைப்புப்போட்டி-4

சென்ற போட்டிக்கு நேயர்கள் அனுப்பிய விடைகளில் கற்பனையும் கட்டுக் கோப்பும் அமைந்த பலவும் இருந்தன. மிகவும் சிறந்ததென்று போட்டிக்குழு தெரிந்தது இது தான்.

### பரிசு பெறும் விடை

**'தரிசு நிலங்கள் மிராசு நிலங்களாகின'**

இதை எழுதியவர்: திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம், சித்தன்கேணி.

**'வரண்ட நிலத்தில் வற்றாத செல்வம்'**

இதை எழுதிய க. தருமலிங்கம், நாச்சிமார்

---

## சந்திரனை அடையும் முயற்சியில் விண்வெளி வீரர் செல்கின்றனர்

### அமெரிக்க அப்பலோ-10 இன்று இரவு புறப்படும்

கென்னடிமுனை, மே 17

அமெரிக்க வானவெளி வீரர்கள் சந்திரனுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். நாளை அவர்கள் புறப்படுகிறார்கள்.

சந்திரனில் மனிதன் இறங்குவதற்கான சோதனைகளை அமெரிக்கா மேற்கொண்டிருப்பது தெரிந்ததே. இதற்காக "அப்பலோ-9" என்ற ராக்கெட்டில் அமெரிக்க வீரர்கள் பூமியைச் சுற்றிப் பறந்து சோதனைகளை நடத்தினார்கள்.

சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு முன்பாக இறுதிக் கட்ட சோதனைகளை நடத்துவதற்கு அமெரிக்கா நாளை 'அப்பலோ-10' என்ற ராக்கெட்டில் ஸ்டாபோர்டு (வயது 38) ஜோன் எங் (வயது 38), செர்னன் (வயது 35) ஆகிய 3 வீரர்கள் அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் ஏற்கனவே விண்வெளிப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர்கள்.

இரவு 10-19 மணிக்கு இவர்கள் பூமியிலிருந்து வானவெளிக்கு 'அப்பலோ-10' ராக்கெட்டில் புறப்படுகிறார்கள்.

பூமியின் ஈர்ப்பு மண்டலத்தைக் கடந்து சென்று மிகக் குறைந்த உயரத்தில் இவர்கள் சந்திரனைச் சுற்றிப் பறப்பார்கள். இரண்டரை நாட்கள் சந்திரனை 30 தடவைச் சுற்றிப் பறந்து சந்திரனில் இறங்குவதற்கான இடம் பற்றி சோதனைகள் நடத்துவார்கள்.

'அப்பலோ 10' ராக்கெட் 2 கட்டங்கள் உள்ளதாக இருக்கும். இவற்றில் முக்கிய ராக்கெட்டில் வீரர் எங் என்பவர் மட்டும் தனியாக 4 தடவை சந்திரனைச் சுற்றுவார். அப்போது ஸ்டாபோர்டு, செர்னன் ஆகிய 2 வீரர்களும் சந்திரமண்டல ராக்கெட்டில் தனியாக பிரிந்து சென்று சந்திரனின் நிலப்பரப்புக்கு மேலாக் குறைந்த உயரத்தில் பார்வை இடுவார்கள்.

இந்த பயணத்தின்போது கலர் டெலிவிஷனில் வீரர்கள் சந்திரனைப் படம்எடுப்பார்கள். இவ்வாறு கலர் படம் எடுப்பது இதுவே முதல் தடவையாகும்.

'அப்பலோ 10 பயணம்தான் விண்வெளிப் பயண வரலாற்றிலேயே மிகவும் ஆபத்தான பயணம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். வீரர்கள் இங்கிருந்து சந்திரனைச் சென்றடைய 3 நாட்கள் ஆகும். சந்திரனை அவர்கள் 2 அரை நாட்கள் சுற்றுகிறார்கள். எனவே இந்தப் பயணத்தை முடித்துவிட்டு அவர்கள் பூமிக்கு திரும்பிவர மொத்தம் 8 நாட்கள் ஆகும்.

26-ந் தேதி அவர்கள் பசிபிக் கடலில் வந்து இறங்குவார்கள்.

### சந்திரனில் ஜூலை மாதம்

இந்த சோதனை வெற்றிகரமாக முடிந்த பிறகு ஜூலை மாதம் 18-ந் தேதி ஆமஸ்டிராங், காலின்ஸ், ஆல்டிரின் ஆகிய 3 வீரர்களும் 'அப்பலோ 11' ராக்கெட்டில் சந்திரனுக்கு செல்வர்கள்.

---

## 'கட்டுப்பாட்டை மீறுகிறவர்களை தூக்கி எறிய வேண்டும்'

சண்டிகார், மே.17

கட்டுப்பாட்டை மீறுகிறவர்களை காங்கிரஸிலிருந்து தூக்கிஎறியவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறினார்.

சண்டிகாரில் நடந்த காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் கலந்துகொண்டு அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. நிஜலிங்கப்பா பேசினார்.

அவர் பேசுகையில் மேலும் சொன்னதாவது:

'கட்சியென்றால் கட்டுப்பாடு அவசியம் ஆனால் காங்கிரஸில் உள்ள சிலர் இதனை பொருட்படுத்துவதில்லை. கட்சியிலுள்ள சிறு குறைகளை பெரிதுபடுத்துவதிலேயேஅவர்கள்தீவிரமாக ஈடுபடுகிறார்கள். காங்கிரஸில் செய்யப்படும் விஷமத்தனங்களுக்கு காரணமானவர்களை எச்சரிக்கிறேன்.'

---

## 'சைவசமயக் கருத்துகளுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டும்'

ஊர்காவற்றுறை, சனி

'பௌத்த அரசியல் தலைவர்கள், இஸ்லாமிய அரசியல் தலைவர்கள், கிறிஸ்தவ அரசியல் தலைவர்கள் தங்கள் மதத் தலைவர்களின் கருத்[illegible]களைக் கேட்டறிந்த பின்ன[illegible]ர அதற்கேற்ப கருத்துக்களை வெளியிடுகின்றனர். சைவசமயத்தைப்பொறுத்த வரையில் அரசியல் வாதிகளும், பொது வாழ்வில் தம்[illegible] ஈடுபடுத்திக்கொள்பவர்[illegible]ளும் சமயக்கோட்பாடுகளையோ சமயக் குருக்க

பண்டிதர் திரு.சோ.தியாகராசா உரைநிகழ்த்துகையில், தமிழ்நாட்டுக்கோயில்களின் சிறப்பையும் நாயன்மார்களின் திருத்தொண்டுகளையும் எடுத்துரைத்தார். திரு.கே.பி. ஹரனும் [illegible]சினார்.

செல்வன் நா. சிவராசா நன்றி கூறினார்.

......

### துன்னாலை குடிநீர்கேடு

உடுப்பிட்டி, சனி

---

## கோரிக்கை நிறைவேறியது

காங்கேசன்துறை, சனி

பல காலமாக இப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்ட கற்கிணங்கமயிலிட்டிச் சந்தியில் தபால்பெட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

---

## நிக்சன் திட்டத்திற்கு வட வியட்னும் கண்டனம்

### ஆனாலும் முற்றாக நிராகரிக்கவில்லை

பாரிஸ், மே 17

அமெரிக்க ஜனாதிபதி நிக்சனின் வியட்னும் சமாதானத் திட்டத்தை வட வியட்னுமியரும் தேசிய விடுதலை முன்னணியினரும் கண்டித்துள்ளனர். எனினும் திட்டத்தை முற்றாக நிராகரிக்கவில்லை.

பாரிஸில் நேற்று மீண்டும் ஆரம்பமாகிய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் வட வியட்னும் தேசிய விடுதலை முன்னணி தூதுகோஷ்டியினர் வியட்னுமிலிருந்து அமெரிக்கப் படைகள் நிபந்தனையின்றி விலகவேண்டும் என்பதை வற்புறுத்தினர். நிக்சனின் சமாதானத் திட்டம் பற்றிய விவாதத்தின் போதே இவர்கள் இவ்வித கருத்தைத் தெரிவித்தனர்.

நிக்சனின் சமாதானத் திட்டம் பிரமாதமானது என அபிப்பிராயம் வெளியிட்டுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. கபோட் லொட்ஜ் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் இப்போது சமாதானப் பேச்சுவார்த்தையில் அதிக அக்கறை காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நிக்சனின் சமாதானத் திட்டத்தில் முக்கிய அம்சமான வியட்னுமிலிருந்து வெளிநாட்டுப்படை விலக்கம் பற்றி தென்வியட்னும் தரப்பினர் அதிக திருப்தியாகவில்லையென அவதானிகள் தெரிவித்தனர்.

### இடமாற்றம்

ஊர்காவற்றுறை-சனி

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடமையாற்றிய ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு கே.கைலாசபிள்ளை பண்டத்தரிப்பு பட்டின சபைக் காரியதரிசியாக நியமனம் பெற்றுள்ளார்.

பண்டைத்தரிப்பு பட்டின சபைக் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு.ஏ.சின்னையா வத்தளை நகரசபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

......

### சிரமதானம்

உடுப்பிட்டி, சனி

வலிகாமம் வடக்குத் திடல் புலம் என்னுமிடத்தில் சிறுபான்மைத் தமிழருக்கென அமைக்கப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தில் பல கிராமங்களைச் சேர்ந்த வாலிபர்கள் சிரமதானம் செய்து வருகின்றனர். இச்சிரமதானப்பணியில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த 30 வாலிபர்கள் கரவெட்டி மேற்குக் கிராம சேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கம் தலைமையில் கலந்து கொண்டார்.

0 0 0

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி மேற்கு வெல்லன்கிராய் வீதி இன்று சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது. கரவெட்டி மேற்குக் கிராம சேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கம் தலைமையில் சுமார் 75 வாலிபர்கள் இச்சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.

### பிரிட்டன் மீது ரஷ்யா குற்றச்சாட்டு

லுசாக்கா, மே 17

ரொடீஷியாவில் பெரும்பான்மையினருக்கெதிராக சட்ட விரோத ஸ்மித் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் மறைமுகஆதரவுதெரிவித்து வருவதாகவும் பிரிட்டன் மீது ரஷ்யா குற்றம்சாட்டியுள்ளது.

பிரிட்டன் நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளதாக இங்கு ரஷ்ய பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

### திருநாள்

அல்லைப்பிட்டி, சனி

பிரசித்திபெற்ற புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியர் தேவாலய வருடாந்த உற்சவம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இம்மாதம் 19-ந்திகதி மாலை ஆராதனையுடனும் 20-ம் திகதி காலை பெரியபாடற் பூசையுடன் திருச்சொரூப பிரகாரத்துடன் முடிவடையும்.

......

### புதிய நியமனம்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை சென் ஆன்ஸ் உதவிக்கட்டளைக் குரவர் வண. தியோஜினஸ் உயிலங்குளத்துக்கு மாற்றம்பெற்றுள்ளபடியால் அவரிடத்திற்கு வண. ஜோசவ் சுவாமியார் நியமனம்பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘தரிசு நிலங்கள் மிராசு நிலங்களாகின’**

இதை எழுதியவர்: திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம், சித்தன்கேணி.

**‘வரண்ட நிலத்தில் வற்றாத செல்வம்’**

இதை எழுதிய க. தருமலிங்கம், நாச்சிமார் கோவில் வீதி, கலட்டி சந்தி, யாழ்ப்பாணம் போட்டிக் குழுவின் உயர்ந்தபாராட்டை பெற்றார்.

## இன்றைய போட்டி

பின்வரும் கற்பனைச் செய்திக்கு அழகானதும் கவர்ச்சியானதும் கூடியவரை சுருக்கமானதுமான ஒரு தலைப்பை கொடுங்கள், பார்க்கலாம்.

‘மட்டக்களப்பை சுற்றியுள்ள கடலேரியில் முழுமதி நாட்களில் எழும் மர்மமான இன்னோசையைப் பற்றி பலர் பலவித அபிப்பிராயங்கள் தெரிவித்துள்ளனர். சிலர் இசையர மகளிரோ என்றும், சிலர் பாடும் மீன்கள் என்றும், வேறு சிலர் வலம்புரி சங்கு, ஊரிகள், தவளைகள் என்றும் ஹேஷ்யம் கூறியிருக்கின்றனர். நம்பிக்கையற்ற சிலர் இந்த ஓசை கல்லடி பாலத்திலுள்ள தந்தி கம்பிகள் மீது காற்று படுவதால் ஏற்படும் ஒலி என்கிறார்கள். இந்த மர்மத்தை துலக்குவதற்கு ஜப்பானிலிருந்து வந்த ஓர் ஆராய்ச்சி குழு கடந்த ஒரு வாரமாக நீரில் சுழியோடி இந்த சப்தத்தை மிக நுண்ணிய ஒலிப்பதிவு கருவிகள் மூலம் பதிவு செய்து வருகின்றது. ஆயினும் ஒலி எங்கிருந்து புறப்படுகிறதென்பதை அவர்களால் இன்னும் நிச்சயமாக கண்டுபிடிக்கமுடியவில்லை. முழுமதி நாட்களில் மட்டும் இவ்வொலி எழுவதன் மர்மம் என்ன என்று அறியும் பொருட்டு வருகிற விசாக பூரணையின்போது தீவிரமான ஆராய்ச்சிகள் நடக்கவிருக்கின்றன. இலங்கை விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சிகளில் கலந்துகொள்வர்.’

## நிபந்தனைகள்

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 22-5-69க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில்வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்: **செய்தித் தலைப்புப்போட்டி (4) ‘ஈழநாடு’, த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** விடைகளை ‘ஈழநாடு’ காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவேண்டாம். ‘ஈழநாடு’ ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியாது. மிகச்சிறந்த விடைக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-) பரிசுப்பணமாக வழங்கப்படும்.

**‘ஈழநாடு’**

**செய்தித் தலைப்புப் போட்டி-4**

**விடை:** ..........................................

..........................................

**பெயர் :** ..........................................

**விலாசம் :** ..........................................

..........................................

விட எடுக்கும் முயற்சிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### தற்காலிக நிறுத்தம்

காபந்து அரசாங்கம் செயல்படத் தொடங்கியதும் பார்லிமெண்ட் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுமெனவும்தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் தக்காலிகமாக நிறுத்தப்படுவர் எனவும் தெரிய வருகிறது

## விண்வெளி வீரருக்கு பாதுகாப்பு

ஐ. நா. (நியுயோர்க்), மே 17

விண்வெளிவீரர்கள் விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டிருக்கும்போது ஏதேனும் அவதிக்குள்ளானால் அவர்களுக்கு உடன் உதவியளித்துக் காப்பாற்றுவதற்கு 60 நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன. இதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.

## ஜனாதிபதி தேர்தலில் ஏழு பேர்

பாரிஸ், மே, 17

பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 7 வேட்பாளர்கள் முன்வந்துள்ளனர் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக ஜனாதிபதி (நடுநிலைக் கட்சி) அலேயின் போவிதர், முன்னாள் பிரதமர் ஜோர்ஜஸ் பெம்பிடு (டிகால் கட்சிக்காரர்) உட்பட காஸ்டன் டிபரே (சோஷலிஸ்ட்) லூயிஸ்டு காடல் (சுயேச்சை) றெக்கியூஸ் டக்ளஸ் (கம்யூனிஸ்ட்) அலெயின் சிரிவைன் (டிராட்ஸ்கிஸ்ட்) மிச்செயி புக்ஸ்வு (தீவிர இடதுசாரி) ஆகியோரே ஜனாதிபதிபதவிக்குப் போட்டியிடுபவர்கள்.

தேர்தல் அடுத்த மாதம் 1, 15-ம் திகதிகளின் இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

## 13 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், சனி

பயிற்சிபெற்றுவரும் டாக்டர்களில் 13 பேர்கள் அரசாங்கசேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் 50 பேர்கள் அரசாங்க சேவை நியமனத்தை எதிர் நோக்கியுள்ளார்கள்.

துக்களை வெளியிடுகின்றனர். சைவசமயத்தைப்பொறுத்தவரையில் அரசியல் வாதிகளும், பொது வாழ்வில் தம்மை ஈடுபடுத்திக்கொள்பவர்களும் சமயக்கோட்பாடுகளையோ சமயக் குருக்களின் கருத்துக்களையோ செயற்படுத்த முயற்சி செய்வதில்லை. சைவமக்கள் சைவசமயக் குருக்கள்மாருக்கு மதிப்பு கொடுக்கவேண்டும்’

சைவப்புலவர், பண்டிதர் வை. இராமகிருஷ்ண ஐயர் சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசுநாயனார் விழாவில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

சரவணை சைவ இளைஞர் சங்க ஆதரவில் சங்கத் தலைவர் திரு. வே. குணரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

சைவாசிரியர் திரு. நா. கந்தையா பேசுகையில், தீண்டாமையை ஒழித்து எல்லோரும் ஆலயத்தில் சென்றுவழிபடும நிலை வரவேண்டும்’ எனக் குறிப்பிட்டார்.

## தந்திகள் படும்பாடு

கோட்டை, சனி

தந்திகளுக்காகக் கொடுக்கப்படும்விஷயங்கள் விலாசதாரர்களுக்கு மாறுபட்டவைகளாகப் போய்க்கிடைக்கின்றன என தபால் தந்தி இலாகாவுக்கு புகார்கள் கிடைத்துள்ளன.

தபாற்கந்தோரில் வேலை செய்யும் தொலைபேசி இயக்குனர்களிற் பலர் சுயபாஷை மூலம் கல்வி கற்றவர்கள் தந்திகள் அநேகமாக ஆங்கிலத்தில் அனுப்பப்பட வேண்டியிருப்பதால் ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி இல்லாத இந்த ஊழியர்களால் மொழிபெயர்க்கும் போது மாற்றமடைகின்றன எனவும் எவ்வாறிருப்பினும் விரைவில் இந்த ஊழியர்களுக்கு தந்திகளைப் பிழையில்லாது அசலைப் போலவே அனுப்பத்தக்க வகையில் ஆங்கிலத்தில் பயிற்சி அளிக்கப்படுமெனவும் பிரஸ்தாப இலாகாவைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 20 ஜீப்புகள் நன்கொடை

கொழும்பு, சனி

20 ஜீப் வண்டிகளை அமெரிக்க ஸ்தானிகர் இம்மாதம் 20-ம் தேதி சுகாதார மந்திரி திரு ஈ. எல். சேனநாயகாவிடம் நன்கொடையாக வழங்குவார். இந்த ஜீப் வண்டிகள் மலேரியா எதிர்ப்பு இயக்கத்திற்கு பயன்படுத்தப்படும்.

செல்வன் நா. சிவராசா நன்றி கூறினார்.

......

## துன்னாலை குதி சீர்கேடு

உடுப்பிட்டி, சனி

துன்னாலை தெற்குத்தயாநிதி சனசமூக நிலையம் கிராமமுன்னேற்றச்சங்கம் ஆகியவற்றின் காரியதரிசியான திரு. சி. செல்லையா துன்னாலைப்பகுதியின் சீர்கேடுபற்றி வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. ஜோசேப்பைப் பேட்டிகண்டு விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து துன்னாலை வேரோண்டைச் சுடலையில் மடம் அமைத்துக் கொடுக்கவும், மித்தில்கரை வாய்க்காலுக்குக் குடிதண்ணீர் எடுக்கப் போவதற்கு வசதியாகப் பாலம் நிறுவவும், துன்னாலை நெற்கு கிராம சேவையாளர் காரியாலயத்திலிருந்து தக்குச் சம்பாதி போகும் வீதியைத் தார் போட்டுச் செப்பனிடவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், திரு. சி. செல்லையா விடம் சம்மதம் தெரிவித்துள்ளார்.

......

## 5-வது ஜாதிக சம்பத

கோட்டை, சனி

ஐந்தாவது ஜாதிக சம்பத சுவீப்விற்பனையை இம்மாதம் 20-ம் தேதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில்ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆரம்பித்து வைப்பார். ஜாதிக சம்பத சுவீப் டிக்கட் 2 ரூபா விலிருந்து ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டிருக்கிறது. இரத்மலானையில் ஜூலை மாதம் 5-ம் தேதி சீட்டிழுப்பு நடைபெறும்.

## பழைய மாணவர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் அரசினர் ஆசிரியர் கலாசாலை பழையமாணவர் சங்க நிர்வாகசபைகலாசாலை அதிபர் திரு க. கந்தையா தலைமையில் கூடியது. தலைவர் பழையமாணவர் சங்கத்தின் அவசியம் பற்றியும் அச் சங்கம் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் குறிப்பிட்டார்.

மேற்படி கலாசாலையில் ஏறக்குறைய 20 ஆண்டுகள் அளபராகக் கடமையாற்றி 30-4-69ல் இளைப்பாறிய திரு ஜே. ஜி. அரசரத்தினம் பி. ஏ. அவர்களுக்கு சேவை நலம் பாராட்டுவிழாவை நடத்துவதெனமுடிவு செய்யப்பட்டது. சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடுவதெனவும் நிர்வாகசபை முடிவு செய்தது.

யில் தபால்பெட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வர் தெரிவித்தார்.

ற்கு வண. ஜோசப் சுவாமியார் நியமனம்பெற்றுள்ளார்.


# கையிருப்பிலே!

# டேவிட் பிரவுண்




**770 - 36 BHP**
**ரூ. 18750/=**
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)

**880 - 46 BHP**
**ரூ. 20500/=**
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)

**அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட**



**3முதல்3½ தொன் நிறை கொள்ளும்**
**உயர்த்தக்கூடிய இழுவை வண்டி**

தொடர்பு கொள்ளுங்கள்.

**ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்**

ரோலன்ஸ் லிமிடெட் (துணைக் கம்பெனி) டரட் ரோட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

'ஒருவர் மற்றொருவரைவிட உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ நினைத்தால் சமத்துவம் இருக்க முடியாது. சரிநிகர் சமானமாக இருப்போரிடையே எந்த ஒருவரும் மேலோங்கியிருக்க முடியாது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 5-ந் திகதி (18-5-69)


## சபாஷ் மேயர்

யாழ்ப்பாண மாநகர சபையின் மின்சாரப் பகுதி ஊழியரின் வேலைநிறுத்த யோசனை கைவிடப்பட்டு நகரில் மின்சார விநியோகம் தடைப்படாமல் தொடர்ந்து கிடைத்துவருகிறது. தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி வேலைநிறுத்தத்தைத் தவிர்த்ததற்காக மேயருக்கு ஒரு சபாஷ் போடவேண்டும். வேலை நிறுத்தத்தினால்தான் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதில்லை. பேச்சுவார்த்தைகள் மூலமும் தீர்வுகாண முடியுமென்பதை உணர்த்திய தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் பாராட்டுக்குரியவர்கள்.

மின்சாரப் பகுதி ஊழியர்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்தும் அவற்றை நீக்குவதற்கும் சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்ததாகவும் இக்கோரிக்கைகள் சம்பந்தமாக மாநகரசபைக்கு எழுதிய பல கடிதங்களுக்கும் பதில் கிடைக்கவில்லையென்றும் இந்நிலையில் வேலைநிறுத்தம் செய்வதைத்தவிர வேறு வழியில்லையென்றும் முடிவுசெய்து இம்மாதம் 17-ம் திகதி வேலைநிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்திருந்தனர். இத்தீர்மானம் சம்பந்தமாக நாம் இப்பத்தியில் குறிப்பிட்டு, தொழிலாளர் பிரதிநிதிகளை மேயர் அழைத்துப் பேசி வேலைநிறுத்தத்தைத் தவிர்க்கவேண்டுமென்றும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண தொழிலாளரும் முன்வரவேண்டுமென்றும் எழுதியிருந்தோம்.

மேயரும் தொழிலாளர் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசி வேலைநிறுத்தத்தைத் தவிர்த்து சுமுகமான ஓர் உடன்பாட்டுக்கு வந்திருப்பது மற்றும் துறையிலுள்ள தொழிலாளருக்கும் நிர்வாகிகளுக்கும் நல்ல முன்மாதிரியாகும்.

## தகவல் தொடர்பு

தகவல் தொடர்பு தினம் கொண்டாடப்படுகின்ற இந்நாளில் இலங்கையில் தகவல் தொடர்பு எந்த நிலையிலிருக்கிறதென்பதைப் பற்றி ஆராய்வது நல்லது.

1966-67-ம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடத்திலும் தந்தி, தொலைபேசிச் சேவையில் இலட்சக் கணக்கான ரூபாய் நஷ்டமேற்பட்டிருப்பதாகதபால்மா அதிகாரிகளின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தந்திக் கட்டணமாக இப்போது வசூலிக்கப்படும் கட்டணம் போதாதென்றும் இதனால் நஷ்டமேற்படுகிறதென்றும் அறிக்கை கூறுகிறது.

தந்திகள் பெரும்பாலும்

அமெரிக்காவில் நடைபெறும் ஒருசம்பவம் அடுத்த சில நிமிடங்களுக்குள்ளேயே ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆசிய நாடுகளுக்கும் கிடைத்து விடுகின்றன. அந்த அளவுக்குத் தகவல் தொடர்புகள் உலகில் முன்னேற்றமடைந்துள்ளன. ஆனால் நமது நாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புடன் தொலைபேசித் தொடர்புகொள்வதானால் சில சமயம் ஒன்பது பத்து மணிநேரம் காத்துத்தவமிருக்கவேண்டும். இதற்குள் பத்து ரூபாய் செலவில் 'யாழ்தேவி'யில் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்து பல அலுவல்களையும் கவனித்துவிடலாம். தொலைபேசி ஒருபுறமிருக்கத்

பௌத்த பாடசாலை விவகாரம்

# "அரசாங்கம் சிறிதும்விட்டுக் கொடுக்கக்கூடாது"

சுயாதீனப் பத்திரிகைகள் சமாசத்தினரால் வெளியிடப்படும் 'சன்' ஆங்கிலத் தினசரியின் 17-5-69 இதழில் ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

அச்சுவேலி, கரவெட்டி அல்வாய் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்குமென்ற நிலையிலிருந்து கல்வி அமைச்சர் சிறிதும் தளரக் கூடாது யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த சிறுபான்மையினருக்கு அரசாங்கத்தின் உதவி அத்தியாவசியமானது என்பதை அறிந்து கல்வியமைச்சர் இப் பாடசாலைகள் சம்பந்தமான முழுப் பிரச்னையையும் தேசிய அடிப்படையில் சரியான முறையில் கொண்டு வந்துள்ளார்.

இந்த மூன்று பாடசாலைகளிலும் கிட்டத்தட்ட ஆயிரம் ஹரிஜன வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். 30 ஆசிரியர்கள் இங்கு கல்வி பயிற்றுகிறார்கள். சாதிப்பாகுபாடு காரணமாக இம் மாணவர்கள் சைவப் பாடசாலைகளில் கல்வி கற்கஇடம்பெற இயலாத காரணத்தினாலேயே இப் பகுதிகளில் சமீபகாலத்தில் இந்த பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

மேற் குறிப்பிட்ட ஹரிஜன வகுப்பினர் உண்மையில் சிங்கள பௌத்தர்கள் எனவும் இவர்களின் மூதாதையர் முன்னர் ஆண்ட பழைய தமிழர்களால் அடிமைகளாக்கப்பட்டு அதனால் சமூகத்தில் தங்கள் நிலையையும் அதிகாரத்தையும் இழந்தனர் என்பதையும் மகாசங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. யாழ் குடா நாடெங்கும் சிதைவுற்ற பௌத்த டகேபோக்களும விகாரைகளும் உள்ளன. அநேக தமிழ்சொற்கள் சிங்களச் சொற்களில் இருந்தே தோன்றியுள்ளன. மிகப் பழைய காலத்தில் சிங்களவர் தமிழர் ஆகிய இ[illegible] சாராரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்பதை இது காட்டுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சிறுபான்மைத் தமிழருக்காக தற்பொழு[illegible] தனிப்பட்டவர்களின் [illegible]

யத்தனங்கள் யாவும் வீணாயின.

ஒவ்வொரு தடவையும் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சாதிப் பிரச்னையை தமிழர்களிடமே அதற்குத்தீர்வு கண்டு ஒரு முடிவுக்கு வரும்படி விட்டன.

இச்சிறுபான்மைத் தமிழரின் அடிப்படை உரிமைகளை பெறுவதற்கோ அல்லது அவர்களின் குறைபாடுகளை நீக்குவதற்கோ பெரும்பான்மைத்தமிழரின் ஆதரவைப் பெற்றுள்ள தமிழரசுக்கட்சி இதுவரை காலமும் ஒன்றும் செய்யவில்லை. சிறந்த கல்வி பெறுதல், தாங்கள்விரும்பிய ஆலயத்துள் சென்று வணங்குதல ஆகியனவும் வேறுபலவும் இந்த அடிப்படை உரிமை என்பதற்குள் அடங்கும்.

இந்தப் பாடசாலைகள் அரசாங்கத்தினல் பொறுப்பேற்கப் படும் என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எதிர்த்து ஒரு பெரியசத்தியாக்கிரகஇயக்கமொன்றையும் இதற்கெதிராகத்திட்டமிட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. 'தமிழர்களின் எதிர்காலம் அழிவுப் பாதையில் செல்லாது அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காகவே இத்திட்டம் என்றுதமிழரசார் இவ்வியக்கத்திற்கான காரணத்தைக்கூறுகின்றனர். இந்த உரிமைகள் எவை? இந்நாட்டில் வாழும் மற்றைய இனத்தவர்களுக்கில்லாத விசேஷ உரிமைகள் தமிழர்களுக்குண்டெனத் தமிழரசுக் கட்சி கருதுகிறதா? ஏற்கனவே சமஷ்டி அரசைப் பெறுவிட்டதென நினைக்கின்றதா?

அரசாங்கம் தனது தீர்மானத்தைத் தளர விடாது அதில் ஸ்திரமாக நிற்பதோடு தமிழரசுக் கட்சியின் வெளிவேஷத்தைக் கலைக்க வேண்டும். வடக்கிலுள்ள சாதிப்பற்றுள்ள தமிழர்களிடமிருந்து ஹரிஜன வகுப்பினரைக் காப்பாற்றவேண்டும்.

## மணப்பெண் சென்ற காரும் பொலிஸ் ஜீப்பும் மோதின

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை பொலிஸ் ஜீப் வண்டியும் மணப்பெண்ணுடன் சென்ற காரொன்றும் ஒன்றோடொன்று மோதிய சம்பவமொன்று நேற்று பருத்தித்துறையில் நடைபெற்றது.

கள்ளக்கடத்தலைப் பிடிக்கும் முயற்சியில் சென்ற ஜீப் வண்டியும் மணப்பெண்ணுடன் சென்ற காரும் பருத்தித்துறை வி. எம். ரேட்டில் மோதிக்கொண்டன. தெய்வாதீனமாக ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஜீப்வண்டிக்கு சொற்பசேதமும் காரின்முன் பக்கம் முழுவதற்கும் பலத்த சேதமும் ஏற்பட்டது. இதனால் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

## வவனியாவில் படுகொலை; உறவினர் கைது

வவனியா, சனி

வவனியாவில் சேமமடு என்ற இடத்தைச் சேர்ந்த தம்பு சங்கரப்பிள்ளை என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக் கொலை சம்பந்தமாக இறந்தவரின் சொந்தக்காரராகிய மணியம் நடராசா, கதிர்காமன் யோகராசா ஆகிய இருவரையும் சந்தேகத்தின்[illegible] சார் [illegible] வவனியா பொலிஸ் இன்[illegible]

## தூக்கிட்டு தொங்கினர்

யாழ்ப்பாணம், சனி

புங்குடுதீவை[illegible] சேர்ந்த மார்க்கண்டு [illegible]ருணசலம் (வயது 52) என்பவர் நேற்று பெரியகடையில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மரண[illegible]ந்தார். பெரிய [illegible]ில் கடையொன்று வைத்திருக்கும் இவர் ஒரு [illegible]

(8-ம் கலத் தொடர்ச்சி)

"இதெல்லாம் ஏன் செய்கிறீர்கள்? என்று சுவாமியைக் கேட்டதற்கு" மக்களுக்குத் தெய்வநம்பிக்கை பலப்படுவதற்காகவே இதையெல்லாம் செய்ய வேண்டியுள்ளது. காசுபணத்துக்காக அல்ல. எனக்கேன் காசு?" என்றார்.

'ஈழநாடு' காரியாலயத்துக்கு அவர் வந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கையில், அவரைக் காணவும் அவரை அழைக்கவும் பலர் வந்து விட்டனர்! எனக்கு ஒன்றும்புரியவில்லை. காலையில் மனம் மிகச்சோர்வடைந்திருந்தது. ஈழத்து சித்தர் வந்து பேசிச்சென்றபின் சோர்வெல்லாம் மறைந்து மனதுக்குப் புதுத் தெம்பு ஏற்பட்டது.

0 0 0

ஈழத்துக்கல்விப் பெரியார் சுவாமிநாதன் அவர்களின் மறைவு ஈழத்தமிழினத்துக்குப் பெரும்நஷ்டமாகும். சிறப்பாக அவரது மறைவால் 'ஈழநாடு' நல்லதோர் அன்பரை இழந்தது. கண் பார்வை அவ்வளவு சரியில்லாவிடினும், "ஈழநாடு" பத்திரிகையை அடிமுதல் நுனிவரையில் பிறரைப்படிக்கச்சொல்லிக் கேட்பாராம். சில வருடங்களுக்கு முன் என்னைவந்து பார்க்கவேண்டுமென்றும் எப்போது வரலாமென்றும் எழுதியிருந்தார். அதைக்கண்டதும் திடுக்குற்று அவ்வளவு பெரியவரைப் பார்க்க நேரில் செல்லவேண்டியது என்கடமை என்றும் அவரைப்பார்க்க எப்போது வசதிப்படுமென்றும் எழுதிக் கேட்டேன். மறுநாளே அவர் மற்றொரு அன்பரின் துணையுடன் நேரில் வந்து என்மனதைக் கொள்ளை கொண்டுவிட்டார். சேவையிலும், அறிவாற்றல்களிலும் பழுத்தபழம். அவர் தமக்குப்பின் பணிசெய்ய நல்ல புத்திரர்களை நாட்டுக்குக் கொடுத்துள்ளார். அவரை ஈழம் நன்றியுடன் போற்றுகிறது. பல்லாயிரக் கணக்கானவர்களுடன் சேர்ந்து, என் பணிவான அஞ்சலியை அவருக்குச் செலுத்துகின்றேன்.

0 0 0

பத்தியால் ஏத்திநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார், துத்திஐந்தலைய நாகஞ்சூழ்சடை முடிமேல் வைத்து, உத்தரமலையர் பாவை உமையவள் நடுங்க அன்று, அத்தியின் உரிவை போர்த்தார் அதிகை வீரட்டனரே.

— அப்பர்சுவாமிகள்.

திருந்தார். மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விசாரணை நடத்தி

# ஐயாறன் எழுதுவது

ஈழத்துச் சித்தர் எனும் திருநாவுக்கரசு சுவாமியைப் பற்றித்தான் இப்போது இங்கு ஊரெல்லாம் பேச்சு. முந்தாநாள் யாழ்ப்பாணத்தில் ஒரு கோவில் முன்பு பல இளநீர் தேங்காய்களை தன் தலையில் அடித்து உடைத்த அதிசயத்தைப் பார்க்க பெருங்கூட்டமாம்.

யார் தலையிலாவது மரத்திலிருந்து ஒரு தேங்காய் விழுந்தால் மண்டையே உடைந்து கபாலமோட்சமாகிவிடும். அப்படியிருக்க நூற்றுக்கணக்கான தேங்காய்களை மட்டையுடன் தலையில் அடித்து உடைத்த ரகசியத்தை அவரிடமே கேட்டேன்.

"எல்லாம் பக்தியின் சக்திதான். உடலிலுள்ள சக்தி மண்டை உச்சிமீது ஏறிவிட்டது. கீழ்த்தர உணர்ச்சிகளெல்லாம் செத்துவிட்டன" என்றார்.

அந்தக் கூட்டத்திலே நின்றுகொண்டிருந்தயாரோ ஒரு பெண்ணிடம், "உங்கள் வீட்டிலே யாரையோ காணவில்லைத்தானே" என்று கேட்டாராம். அந்தப் பெண் தலை அசைத்து ஒப்புக்கொண்டார். அவரது தந்தையை சென்ற 6 வருடங்களாகக் காணவில்லையாம். மறுநாள் அந்தப் பெண்மணி வந்து தன் தந்தையைப்பற்றிய தகவல் அறிய ஆவலுடன் விரும்பவே, முதல்நாள் தாம் கூறியது எதுவும் நினைப்பில்லை என்றும், இன்னொரு தரம் வரும்போது, சொல்லலாமென்றுவிட்டார்.

சில வருடங்களுக்குமுன்பாகக் கதிர்காமத்துக்குச் சென்றிருக்கையில், அவர் என்னை அழைத்தார். பக்கத்தில் ஒரு கொள்ளிக்கட்டை இருந்தது. அதை எடுத்து தன் உள்ளங்கையில் நெருப்பைத் தேய்த்தார். ஒன்றும் செய்யவில்லை. நெற்றியிலும் அவர் நெருப்புத் தணலைத் தேய்த்துக்கொள்வாராம். இது எப்படி என்று கேட்டதற்கு, "12 வருடங்களுக்கு முன்பாக கரைவழியாக கதிர்காமத்துக்கு 45 நாள் நடந்துவருகையில். கால் கொப்பளித்துவிட்டது. மாணிக்ககங்கையில் காலை ஊறவைத்தேன் பின்னர் கதிரைமலைமீது ஏறினேன். மாலை 6 மணி. முருகனை நினைத்து அழுது அழுது பாடினேன். கண்திறந்து பார்க்கும்போது எங்கும் முருகன் மயமாக இருந்தது. அங்குள்ள ஓமகுண்டத்தில் ஒரு காலை நெருப்பில் வைத்தேன். புண் மாறிவிட்டது. மற்றக்காலை வைத்தேன் ஐஸில் வைத்தது போலிருந்தது. புண்ணும் காணவில்லை. அதுமுதல் நெருப்பு எனக்குச் சுடுவதில்லை" என்றார்.

0 0 0

இரண்டு நாட்களுக்கு முன் கீரிமலையிலே ஓர் அன்பர் "சுவாமி, மழையே வரவில்லையே" என்றாராம். அன்று இரவு இடிமுழக்கத்துடன் மழை பெய்தபோது, இடிகளைக் கேட்டு பயந்து அந்த அன்பர் "போதும் போதும் இடியை நிறுத்துங்கள்' என்றாராம்.

12 வருடங்களாக இவர் குளிக்கவே இல்லையாம். என்றாலும் தடிமனோ, தலைவலியோ வந்ததில்லை என்றும் கூறுகிறார். நல்லதேக திடத்துடன் உள்ள அவரது கண்களில் விசேஷ ஒளிவீசுகிறது. போகிற இடமெல்லாம் ஏதாவது சித்து வேலை செய்து கொண்டுபோகிறாராம்.

ஓர் உரித்த தேங்காயை எடுத்து கீழே போட்டார். அரிவாளால் வெட்டினாலும் கூட சிறிது முன்பின்னாக உடையும்; ஆனால் அந்தத் தேங்காய் சரிபாதியாக உடைந்தது. பிறகு ஏதேதோ சொன்னார். அவர் சென்றபிறகு அங்கிருந்த ஓர் அன்பர் இதைத் தம்மாலும் செய்ய முடியாதா என்று மற்றொரு தேங்காய் கொண்டுவரச்செய்து சித்தர் மாதிரியே உயரத்திலிருந்து கீழே போட்டார். அது கோணல் மாணலாக சற்றே பிளந்ததேயன்றி உடையக்கூட இல்லை!

(6-ம் கலம் பார்க்க)

வேலை இழக்கும்

## 27 ஆசிரியர் பிரச்னை: ஜி.ஜி., பிரதமரை சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிங்கள [illegible]தர்ச்சியின்மை[illegible]

வேலைநீக்கம் செய்யப் படவிருக்கும் 27 நெசவு [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கின்றனர். தந்திக் கட்டணமாக இப்போது வசூலிக்கப்படும் கட்டணம் போதாதென்றும் இதனுல் நஷ்டமேற்படுகிறதென்றும் அறிக்கை கூறுகிறது.

தந்திகள் பெரும்பாலும் தபால் அட்டை போய்ச் சேரும் காலத்துக்குப் பின்னரே போய்ச் சேருகின்றன. தந்திக்குரிய கட்டணத்தை அறவிட்ட பின்னர் அவை தபாலில் பத்துச்சத செலவுடன் போய்ச் சேருகின்றன. தபாலில் அனுப்பப்படும் தந்திகளுக்குதபால்செலவு போக மிகுதிப் பணம் திருப்பிக் கொடுக்கப்படுவதில்லை. இதைக் கணக்குப் பார்த்தால் தபால் தந்தி இலாகாவுக்கு இலாபம் கிடைத்திருக்கவேண்டுமே யொழிய நஷ்டம் ஏற்படமுடியாது.

...டும். இதற்குள் பத்து ரூபாய் செலவில் 'யாழ்தேவி'யில் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்து பல அலுவல்களையும் கவனித்துவிடலாம். தொலைபேசி ஒருபுறமிருக்கத் தந்திச் சேவையோ ஆமைவேகத்திலும் மிக மிகக் குறைவு.

நமது தகவல்தொடர்பு சேவை அதிகாரிகள் அடிக்கடி தகவல் தொடர்பு கருத்தரங்குகளிலும் மகாநாடுகளிலும் கலந்து கொள்வதிலும் தபால் தந்தி அமைச்சர் வெளிநாடுகளுக்குச் சென்று தகவல் தொடர்பு பற்றி ஆராய்ந்து திரும்புவதிலும் குறைச்சலில்லை. ஆனுல் நமது தகவல் தொடர்புச்சேவை மட்டும் திருந்துவதாகக் காணேம்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## சோமசுந்தரம் செட்டியார் விளக்கம்

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் தமிழக சைவ அறிஞர் சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் எழுதுவதாவது:-

நான் 29-4-69 அன்று திருக்கோணமலைக்கு சுவாமி தரிசனஞ் செய்யச் சென்றிருந்தேன். அன்று மாலை சுவாமி தரிசனஞ் செய்த பொழுது ஆலய தருமகர்த்தாச் சபைத் தலைவர் டாக்டர் சித்திரவேலு அவர்களும் மற்றுஞ் சில பிரமுகர்களும் உடன் இருந்தார்கள். உற்சவமூர்த்தியின் அமைப்மைபற்றிக் குருக்கள் அவர்களிடம் விசாரித்தேன். அவர்களும் விளக்கந் தந்தார்கள். அம்மூர்த்தத்தின் நடுவிலுள்ளது ''ஸ்கந்தர்'' உருவம். புதிதாக அது சேர்க்கப்பட்டது என அறிந்து கொண்டேன். நிகழ்ந்தது இவ்வளவே.

பின்னர் அன்று மாலை 7 மணிக்கு இந்துக்கல்லூரியிலே இந்து வாலிபர் சங்கச் சார்பில் பண்டிதர் வைரமுத்து தலைமையில் ஓர் உரை நிகழ்த்தினேன். உடனிருந்தவர்கள் நகரசபைத் தலைவர் டாக்டர். சி. சிவானந்தம், அரசாங்க உதவி அதிபர் திரு. செ. சிவஞானம், சைவப்புலவர் வடிவேலு முதலியோர்.

அவ்வுரையிலே சோமாஸ்கந்தர் திருவுருவத்தைக்கண்டதும், அதன் விளக்கத்தைக் குருக்கள்மூலமறிந்து கொண்டதும் பற்றித்தான் பேசினேன். சோமாஸ்கந்த திருவுருவம் நன்கு அமையவில்லை என்று நான் பேசியதாக வெளிவந்த செய்தி தவறு.

திருக்கோணமலையிலுள்ள சோமாஸ்கந்த முகூர்த்தம் முறைப்படிதான் அமைந்துள்ளது. சுவாமி இடது கையில் சின்முத்திரையில்லை. அத்திருக்கரம் சிப்ஹகர்ணஹஸ்தமாகவுள்ளது. நடுவிலுள்ள ஸ்கந்தர் (பாலசுப்பிரமணியர்) திருவுருவம் பின்னர் சேர்க்கப்பட்டதாகவிருக்கலாம். முறைப்படி அமையவில்லை என்று யான் கூறியதாக வெளிவந்த செய்திதவறு. இதற்கு விளக்கமாக ஆலய தருமகர்த்தாச் சபைத் தலைவர் டாக்டர் சித்திரவேலு அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளாரே. அதனைக் கவனியாது எனது மதிப்புக்குரிய கலாநிதி சிவஸ்ரீ கயிலாசநாதக்குருக்கள் ஒரு மறுப்பு எழுதியிருப்பது வருத்தமாக இருக்கின்றது.

— க. சோமசுந்தரம்.

யாழ்ப்பாணம்.

சாராரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்பதை இது காட்டுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சிறுபான்மைத் தமிழருக்காக தற்பொழுது தனிப்பட்டவர்களின் கீழ் இயங்கிவரும் பாடசாலைகளை தேசிய முறையில் கையேற்கிருர் அமைச்சர் என நாங்கள் கொள்கிறேம். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்பு அவசியம். உயர்சாதி இந்துக்களின் தரத்திற்கு தகுதியாக இவர்களும் தங்கள் அறிவை வளர்ப்பதில் சமத்துவ வாய்ப்பைப் பெறவேண்டும்.

கடந்த 50 வருடங்களாக வடக்கிலுள்ள சிறுபான்மை தமிழர் தாங்கள் எழுச்சி பெறுவதற்காகச்செய்த பிர...

## உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. 30-ம் திகதி ரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்த விழாவும் நடைபெறும்.

## ரூ 6 லட்சம்

கோட்டை, சனி

கூட்டுறவு முயற்சியில் நடைபெறும் கிராம கைத்தொழில் அபிவிருத்திக்காக கிராம முன்னேற்றசங்கங்களுக்கு சுமார் 6 லட்சம் ரூபாய் வழங்க உள்ளூராட்சிஅமைச்சு தீர்மானித்துள்ளது.

...ராகிய மணியம் நடராசா, கதிர்காமன் யோகராசா ஆகிய இருவரையும் சந்தேகத்தின்பேரில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராமநாதன் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டபின் பொலிசாரின் உதவியுடன் புலன் விசாரணை செய்து வருகின்ருர்.

## மூன்று மொழிகளிலும்

அநுராதபுரம் சனி

இப்போது அநுராதபுரம் பஸ் நிலையத்தில் பஸ் நேரங்களை அறிவிக்கும் பலகை தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதி தொங்கவிடப்பட்டிருக்கிறது.

## எதிரி விடுதலை

சாவகச்சேரி, சனி

சென்றவருடம் ஆகஸ்ட் 24ந்திகதி வட்டக்கச்சி சில்வாவீதியைச் சேர்ந்த ராசரத்தினம் பெண் சிவகாமியின் குடுமியை வெட்டி அவமானப்படுத்தியதாக அதே ஊரைச் சேர்ந்த கந்தையா தர்மலிங்கம் அல்லது சின்னத்துரை என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் விசாரணை முடிவில் எதிரியைச் சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்தார்.

## இ. போ. ச. அதிகாரிகள் கவனிப்பார்களா?

கடந்த சில மாதங்களாக யாழ். இ. போ. ச. பஸ் சேவை படுமோசமான நிலையில் இயங்கி வருகின்றது. காலையிலும் மத்தியானத்திலும், மாலையிலும் அநேக மக்கள் பிரயாணம் செய்யக்கூடிய நேரமாகும். இந்த நேரத்திலும் பஸ்கள் ஒழுங்காக ஓடவிடாதபடியால் மக்கள் இரண்டு மூன்று மணித்தியாலங்கள் பஸ்களுக்காகக் காத்திருக்க நேரிடுகின்றது. ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்காக நானும் என் இனத்தாரும் சென்ற 14ம்திகதி காலை 8மணிக்கு திருநெல்வேலி சென்று நின்றேம். 10மணிக்கு ஒரு பஸ் மாத்திரம் தான் வந்தது. அதுவும் இட நெருக்கடியுடன் வந்ததால் எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை. என்னைப் போல இருபத்தைந்து பேர் பஸ்ஸுக்குக் காத்திருந்து பதினெருமணிக்கு வீடு திரும்பினேம். இப்படிப் பஸ்ஸுக்குக் காத்திருந்து வீடு திரும்பும் மக்கள் வீதியிலும் அநேகமுண்டு. இப்படி பஸ்ஸுக்குக்காத்து நிற்பதிலேயே ஒருவருடைய அரைநாள் கழிந்து விடுகின்றது. இனியாவது பஸ்களை ஒழுங்கான நேரத்திற்கு விடுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

நா. சந்திரலிங்கம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

(வயது 52) என்பவர் நேற்று பெரியகடையில் சுழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மரணமாகியிருந்தார். பெரிய கடையில் கடையொன்று வைத்திருக்கும் இவர் ஒரு கடிதத்தையும் எழுதிவைத்திருந்தார். மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விசாரணை நடத்தினுர்.

...டனரே.

— அப்பர்சுவாமிகள்.

## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா மாணவர் பேச்சுப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு பேச்சுப்போட்டி நடைபெறும்.

**3 பிரிவுகள்:**

சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

மத்திய பிரிவு 1-6-69-ல் 16 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

கனிஷ்ட பிரிவு 1-6-69-ல் 12 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

### பேச்சுக்கான விடயங்கள்:

**சிரேஷ்ட பிரிவு**

1. மக்களும் பத்திரிகைகளும். 2. தேசிய ஒற்றுமை. 3. விஞ்ஞானக்கல்வி. 4. வண. ஞானப்பிரகாசர். 5. 'ஈழநாடு' பத்திரிகை. 6. இஸ்லாமும் தமிழும். 7. கூட்டுறவும் பொருளாதார நலனும்.

**மத்திய பிரிவு**

1. உணவுஉற்பத்தி. 2. பத்திரிகையும்வாழ்க்கையும். 3. சுவாமி விபுலானந்தர். 4. 'ஈழநாடு' பத்திரிகை. 5. உமறுப் புலவர். 6. இலங்கையின் கைத்தொழில் விருத்தி.

**கனிஷ்ட பிரிவு**

1. காந்திமகான். 2. ஆறுமுக நாவலர். 3. 'ஈழநாடு' பத்திரிகை. 4. உடற்பயிற்சி. 5. எமது நாடு. 6. நபிகள் நாயகம்.

விண்ணப்பங்கள் யாவும் 'ஈழநாடு' மாணவர் பேச்சுப்போட்டிக் கூப்பனில் நிரப்பப்பட்டு, தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-5-69-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா பேச்சுப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இப்பேச்சுப்போட்டி சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப் படும்.

**'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா**

**மாணவர் பேச்சுப் போட்டி**

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

பிரிவு: ..........................................

## ஜி.ஜி., பிரதமரை சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிங்கள ஸ்தர்ச்சியின்மையால், வேலைநீக்கம் செய்யப்படவிருக்கும் 27 ஆசிரியர்கள் பிரச்னை சம்பந்தமாக யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், இவ்வாரம் பிரதமரைச் சந்திந்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிருர்.

வேலைநீக்கம் செய்யப்படவிருக்கும் 27ஆசிரியர்களும், ஐக்கிய இலங்கை நெசவு ஆசிரியர்சங்க நிர்வாகக் கமிட்டியும், நல்லூர் நெசவு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில், நேற்று முன்தினம், யாழ்ப்பாண எம்பியைச் சந்தித்தபோது, அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

27 ஆசிரியர்களையும் சிங்கள நிர்ப்பந்தத்தால் வேலை நீக்கம் செய்ய விடமாட்டேன் என்று திரு. பொன்னம்பலம் அவர்களிடம் வாக்குறுதியளித்தார்.

ஐக்கிய இலங்கை நெசவு ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எஸ். மகாதேவா கூறியதாவது; யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி சிறுகைத்தொழில் இலாகாவைச் சேர்ந்த 37 ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்படவிருப்பது அநீதியானது.

அரசாங்கம் உடை உற்பத்தியில் தன்னிறைவுகாண முயற்சிக்கும் இவ்வேளையில் மேற்படி ஆசிரியர்களினுல் வட, கீழ் மாகாணங்கள் துணி உற்பத்தியில் போதியளவு தன்னிறைவுகண்டு முன்னேறிவரும் இவ்வேளையில் சிங்களம் யாருக்குத் தேவை என உணராமல் அரசாங்கம் சிங்கள சட்டத்தை அமுல் நடத்தும் தீவிரநோக்கோடு தமிழ்மக்கள்மீது பாரத்தை சுமத்துகிறது. தொழில் நுட்பரீதியில் மற்றவர்களுக்கு வழிகாட்டும் நெசவு தொழிலில் 12 வருட காலமாக உழைத்துவந்த ஏழை ஆசிரியர்களுக்கு அரசாங்கம் அநீதி விளைவிப்பதை தமிழ் மக்கள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள்.

வேலைநீக்கம் செய்யப்பட்விருக்கும் 27 நெசவு ஆசிரியர்களில் 21 பேர் பெண் ஆசிரியர்களாவர்.

## செய்திச் சுருக்கம்

### மறுமலர்ச்சி வேண்டும்

கண்டி, சனி

உலகில் எந்த ஒரு நாடாவது முன்னேற்றமடைய வேண்டுமானுல் அங்கு கல்வியில் மறுமலர்ச்சி தோன்றவேண்டும். நாடு கல்வியறிவில்லாத மக்களின் மூலம் சிறந்த சேவையைப் பெறமுடியாது.

இவ்வாறு பல்கலைக்கழக உபவேந்தர் திரு. ஈ. ஓ. ஈ. பெரேரா பல்கலைக்கழக அக்பர் நெல், விடுதிகளுக்கான சின்னம்ஒன்றினைத்தயாரித்து மிகச் சிறப்பாக நடைபெற்ற விழாவில் அதனைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்கள் கல்வித்தரமுடையவர்களாவே வெளியேறுகின்றனர். இப்பொழுது இவர்களின் சேவை பயன்படாவிட்டாலும் எதிர்காலத்தில் இவர்களின் சேவை பயன்படத்தக்கதாகவமையும் எனக் கூறினுர்.

0 0 0

### இரத்த வங்கி இல்லை

எருக்கலம்பிட்டி, சனி

மன்னுர் அரசினர் வைத்தியசாலை மன்னுர் மாவட்டிலேயே மிகப்பிரதான வைத்தியசாலையாக விருந்தும் அங்கு இரத்தவங்கி இல்லை. இங்கு சிகிச்சை பெறவரும் ஒரு நோயாளருக்கு இரத்தம் தேவைப்பட்டால் அந்த நோயாளருக்கு இரத்ததானம் வழங்க அவரின் உறவினர் இரத்த தானம் செய்யக்கூடியவர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வருவதற்கிடையில் அதிக நேரம் வீணுவதோடு நோயாளரின் நிலைமையும் மோசமடைகின்றது எனப் பொதுமக்கள் புகார்கள்தெரிவிக்கின்றனர். இந்த வைத்தியசாலைக்கு இரத்த வங்கியின் அவசியத்தை யுணர்ந்து வெகு விரைவில் இரத்த வங்கியொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென மக்கள் வற்புறுத்தியுள்ளனர்.

### ரஷ்யக்கிரகம் சுக்கிரனை அடைந்தது

மாஸ்கோ, மே 16

சென்ற ஜனவரி மாதம் செலுத்தப்பட்டரஷ்ய விண்வெளிக்கலம் இன்று பகல் 11-30 மணிக்கு சுக்கிரனை அடைந்தது. இது சுக்கிரனைப்பற்றிய பல புதிய தகவல்களை தெரிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org